2786
3

மூலதனம்

ம. சிங்காரவேலு B.A., B.L.,
ப. ஜீவானந்தம்

புது இலக்கியப் பதிப்பகம்

12 OCT 1975
MADRAS

மூலதனம்

MULATANAM
By
CINKARAVELU (Ma); JIVANANTAM (Pa).
573

ம. சிங்காரவேலு, பி.ஏ., பி.எல்.

ப. ஜீவானந்தம்

புது இலக்கியப் பதிப்பகம்

61, தம்பு செட்டி தெரு, சென்னை-1.

வெளியீடு – 24
முதற்பதிப்பு: நவம்பர், 1973.
© பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 2-50

அச்சிட்டோர்:
பாரதி பிரிண்டர்ஸ்,
சென்னை-1.

17 OCT 1975
MADRAS

முன்னுரை

இந் நூலில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் 1935 – 36ஆம் ஆண்டுகளில் 'புது உலகம்' என்ற மாத இதழில் வெளிவந்தவைகள் ஆகும். 'புது உலகம்' அன்று ஒரு மார்க்சிஸ்ட இதழாகவே சென்னையிலிருந்து வெளி வந்தது. தமிழ் நாட்டில் வெளியான முதல் மார்க்ஸிஸ்ட் இதழ் 'புது உலகம்' என்று சொல்வதிலும் தவறில்லை. இதன் ஆசிரியர் பொறுப்பைத் திரு. டி. என். ராமச்சந்திரன் அவர்கள் வகித்திருந்தார். அவர்கள் 'புது உலகம்' இதழைத் தொடங்குவதற்கு முன், 'மூலதனம்' என்ற பெயரில் நாகப்பட்டினத்திலிருந்து ஒரு மாத இதழ் நடத்த முயன்றார். அப்பொழுது தஞ்சை மாவட்ட கலெக்டராக இருந்த திரு. இ. இ. மாக் என்ற ஒரு ஐ. சி. எஸ். அதிகாரி, "நீங்கள் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்பக் கூடுமென்று தெரியவருவதால்" என்று கூறி, பத்திரிகைக்கு ஓராயிரம் ரூபாய் ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று ஆணை யிட்டார்; அதோடு, இதழை அச்சிடுபவரும் (அவரது தந்தையாரும்) ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று எச்சரித்தார். ஆனால், அச்சிடுபவர் பணம் கட்டக் கோரு வதற்கு ஆதாரமில்லையே என்று திரு. டி.என். ராமச்சந்திரன் அவர்கள் எடுத்துக் கூறவே, மாவட்டக் கலெக்டர், ஆசிரியர் பொறுப்பை வகிக்கப் போகும் திரு. டி. என். ராமச்சந்திரன் அவர்கள் ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்.

இந்த நிலைமைக்குப் பின்னரே தான், சென்னையிலிருந்து தோழர் ம. சிங்காரவேலு அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு 'புது உலகம்' வெளிவரத் தொடங்கியது. அப் பொழுது தோழர் ம. சிங்காரவேலு அவர்களிடமிருந்து கட்டுரைகளைப் பெற்றுப் பத்திரிகையில் வெளிவர உதவி யாக இருந்தவர் நாகை தோழர் கே. முருகேசன் அவர்கள் ஆவார். அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்து வது எங்கள் கடமையாகும்.

அப்பொழுது 'மூலதன'த்திற்காக எழுதிய தோழர் ம. சிங்காரவேலு, தோழர் ப. ஜீவானந்தம் ஆகியவர்களின் கட்டுரைத் தலைப்போடு இந்நூல் வெளியாகிறது. இதனை வெளியிடுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அதோடு, பொதுவுடைமைக் கொள்கைகளை, உலகுய்யக் கண்டு உணர்த்திய காரல் மார்க்ஸின் ஒப்பற்ற கட்டுரைகளையும் இந்நூலில் சேர்த்துள்ளோம்.

தோழர் மா. சிங்காரவேலு அவர்கள் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் கர்த்தாக்களில் முதன்மையானவர். தொழிலாளர்களின் வாழ்வுக்காகவும், பொதுவுடைமை இலட்சியத்திற்காகவுமே தம்மை முழுதும் அர்ப்பணித்துக் கொண்டவர். தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் புரட்சி மிக்க வரலாறு தமிழ்நாடு நன்கு அறிந்ததே. பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கொள்கைகளோடு – தேசிய இலட்சிய ஆர்வமும் – சர்வ தேசியப் போக்கும் முனைந்து நின்ற ஒப்பற்ற தோழர் ஆவார். இவ்விருவர்களின் கருத்துரைகள் அன்றுபோல் இன்றும், என்றும் பயனுள்ளதாகவே இருக்கும். அவர்கள் காட்டிச் சென்ற சீரிய பாதை தமிழ் உலகுக்குச் சிறந்து பயன்பட விழைகிறோம்.

நம் நாடும் விடுதலை பெற்று 25 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. நாம் அரசியல் சுதந்தரம் பெற்றதோடு நம் நாட்டு விடுதலைப் போராட்டம் முடிந்து விடுவதில்லை ; அதனால்தான் பொருளாதார சுதந்தரம், தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான போராட்டம், சமுதாய ஏற்றத் தாழ்வற்ற சமதர்மப் போராட்டம் ஆகியவை முனைப்புற்று நடக்கின்றன. இக் கருத்தினை நன்கு விரிவுபடுத்தவே, தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் 'அடிமையில் மோகம்' என்ற கட்டுரையின் சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

" 'என்று ஒழியும் இந்த அடிமையில் மோகம்' என்று பாடினர் பாரதியார். அவர் கூறிய அடிமைத் தனம் அரசியலில் வழங்கிவரும் அடிமைத்தனத்தை முக்கியமாகக் குறிப்பிடுவதாகும். இதனை அரசியல் அடிமைத்தனம் என்பர். ஆனால், அரசியலில் மட்டுமல்ல

மக்களுக்குள்ள அடிமைத்தனம். பொருளாதாரத்திலும் ஓர்வித அடிமைத்தனம் உண்டு. அதனைப் பொருளாதார அடிமைத்தனம் என்பர். உலகில் வழங்கிவரும் மதங்களிலும் அடிமைத்தனம் உண்டு. அதனை மத அடிமைத்தனம் என்பர். மக்களது நடையுடை பாவனைகளிலும் அடிமைத்தனம் உண்டு. இதனைச் சமூக வாழ்க்கையில் அடிமைத்தனம் என வழங்குவர். உலகில் நிலவிவரும் இவ்வித அடிமைத்தனங்களில் ஒன்றையே நீக்க இதுகாறும் மக்கள் பாடுபட்டு வருகின்றனர். மற்ற அடிமைத்தனங்களாகிய — பொருளாதார அடிமைத் தனத்தையும், மதங்களிலுள்ள அடிமைத் தன்மையையும், சமூக வாழ்க்கையிலுள்ள அடிமைத் தன்மையையும் நீக்கினுலொழிய உலகம் முழுச் சுதந்தரத்தை அடையாதென அறிதல் வேண்டும்.

...இந்திய தேசிய காங்கிரஸ் உழைப்பால், நாடு ஒருவாறு விடுதலை அடைந்த போதிலும், உலகத்தின் மற்ற நாடுகளிலுள்ள முதலாளிகள் அரசியல் போலவே இந்தியா இருக்குமென்பதில் ஐயமில்லை. ...உலகத்தில் விடுதலை அடைந்திருப்பதாகச் சொல்லும் நாடுகள் அதனை ஜனநாயக அரசு என்று வழங்குவர். இவர்கள் சொல்லும் ஜனநாயக சுதந்தரத்தில் எவ்வளவு பேர் உண்மையான சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறுர்கள்? சிலர் உலக சுகபோகங்களை அனுபவிக்க பெரும்பாலோர் பொழுது போக்குவதே பெரும் கவலையாக இருந்து வரும். உலகம் முழுமையும் எல்லாவித முதலாளித்துவ அரசுகளில் இந்த நிலைமையே நீடித்து வருகிறது. இவ்வித நிச்சயமில்லா வாழ்விற்குச் சுதந்தரம் வந்துமென்ன, வராதிருந்துமென்ன?

இன்றைய உலகில் பெரும்பான்மை மக்கள் சுதந்தரம் என்பது பற்றி இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே ஆடுமாடுகளைப்போல் பொழுதைப் போக்கி வருகின்றுர்கள். இவர்களில் சிலர் — மக்களுக்கு வாக்குரிமை இருப்பதாகச் சொல்லுகின்றுர்கள். வாக்குரிமை உள்ளவர்கள்

எத்தனை பேர் தங்களுடைய துயர நிலை தீருமென்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள்? .. ஜனநாயக அரசுகள் என்று கூறும் நாடுகள் யாவற்றிலும் — மக்கள் வேலை யின்றித் திரியும் அவலநிலையை என்னென்று சொல்வது? இவ்வித சக்தியற்ற தன்மை, ஜனநாயக அரசுகளிலெல் லாம் நிறைந்திருப்பதென்றால், மக்களாட்சியின் மதிப் பென்ன?... முதலாளித்துவ அரசுகளில் அடிமையில் மோகம் ஒழியுமென்பது பகற்கனவே. ...ஆங்கில நாட்டி லும் பெரும் அரசியல்வாதிகள் எவ்வளவோ பாடுபட்டும், எவ்வளவோ திட்டங்கள் ஏற்படுத்தியும், எவ்வளவோ ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டியும், எவ்வளவோ அட்டவா போன்ற வணிக உடன்படிக்கைகள் செய்தும், அனைத்துலக நாடுகளின் பொருளாதாரக் கூட்டங்களைக் கூட்டியும், பெரும்பான்மையோருடைய பசிப்பிணியை நீக்கினதாக இல்லை. இன்றைக்கும் வேலை செய்ய உடல் வலிவைப் பெற்ற இலட்சக்கணக்கான ஆங்கிலேயர்கள் வேலையின்றித் திண்டாடி வருகின்றார்கள். பசித்தோர் யாத்திரை அங்குமிங்கும் கண்கண்ட காட்சியாகவே இருக்கிறது ..

தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, வீடு வசதி களுக்குமேல் நூறு, ஆயிரம் பங்கு ஒருவனுக்கு இருக்க, இவ்வசதிகள் ஒரு பங்குகூட மற்றவனுக்கு இல்லா திருக்க, உலகம் எதில் விடுதலை அடைந்ததாக எண்ணு வது? ஆதலால், உலக அரசியல்களிலும், உலகப் பொருளாதார நிலைமையிலும், அடிமையில் மோகம் பெரும்பான்மை மக்களுடைய மனதில் நிரம்பி இருப் பதை யாரும் மறுக்க முடியாது.

மதங்களின் மேலுள்ள மோகத்தைச் சற்றுக் கவனிப் போம். மதங்களால் மனிதனுக்கு ஆத்மார்த்திக விடுதலை உண்டாவதாகக் கூறுகின்றார்கள். பசியும், பிணியும் ஒரு பக்கம் மக்களைப் பிடித்திழுக்க, நரகமும் மோட்சமும் மற்றொரு பக்கம் மக்களைப் பிடித்தாட்ட, குருக்களும், பாதிரிகளும், முல்லாக்களும் பிறிதொரு புறம் வைதிக வாழ்விற்கு உள்ளதைப் பிடுங்கிக்கொள்ள

ஆத்மார்த்திக விடுதலை அடைந்துமென்ன? அடையா விட்டாலுமென்ன? கோடானுகோடி செல்வம் மத நிறுவனங்களுக்குச் செலவாகின்றது. ...நமது இந்திய நாட்டில், கோடானுகோடி மக்களின் ஆத்மார்த்திக வாழ்வு, விக்கிரக ஆராதனைகளிலும், தூபதீப நிவேத னங்களிலும், நெய், பால், தயிர் அபிஷேகங்களிலும், ஆடு, கோழி பலியிடுவதிலும், தீர்த்தம், திருவிழா வேடிக்கைகளிலும் செலுத்தப்பட்டு வருகின்றன. பொது மக்கள் மதத்தால் வீண் நடவடிக்கைகளில் மனதைச் செலுத்தி வருகின்றார்கள். மதங்களில் மக்களுக்குள்ள மோகம் – அவர்கள் மூடத்தனத்திலும், அறியாமை யிலும், விசாரணையின்மையிலும், வறுமையிலும், கொள்ளை நோய்களிலும் வருந்தி வாழ்கின்றார்களே யொழிய, எவ்வித விடுதலையும் அடைந்தபாடில்லை. மதங்களால் பெரும்பான்மை மக்களுக்கு இவ்வுலகிலாகி லும், அவ்வுலகு என்று சொல்வதிலாகிலும் இதுவரை யாதொரு பயனும் நேர்ந்ததாகச் சொல்வதற்கில்லை. மதப்பற்று அதாவது மதத்தின் மீதுள்ள மோகப் பிசாசு உலகைவிட்டுப் போகும் வரை, மக்களுக்குள் போரும், கலகமும் நிறைந்தே வரும்.

மூட நம்பிக்கைகளால் ஏற்படும் அடிமைத்தனத் தைச் சற்று ஆராய்வோம். சரியை, கிரியை என்றும், திதி திவசங்களென்றும், நல்ல நாள், கெட்ட நாள் என்றும், கிருத்திகை, அமாவாசை என்றும் சொல்லிக் கொண்டு, அந்தக் கற்பனைகளுக்குத் தமிழ்நாட்டு மக்கள் அடிமையிலும் அடிமையாகி யிருப்பதை அறிஞர்கள் வெறுக்காமலிரார்கள். சிலர் தாங்கள் இருக்கும் வீடு ஆகாதென்று ஓடுகிறார்கள். இறந்தவன் பேய் பிடித்து உலாவுகின்றான் என்கிறார்கள். குழந்தை பிறந்த நேரம தாய் தந்தைக்கு ஆகாதென்று குழந்தைகளைக் கொன்று மிருக்கின்றார்கள். சாதாரண நோய்களைப் பேய் பிசாசு களால் நேர்ந்ததாக எண்ணியும் – முற்பிறப்பில் செய்த தீவினையால் வந்தது என்று நம்பியும், நோய்களுக்குச்

சாதாரண சிகிச்சைகூட செய்யப்படாமல் அநேகர் மாண்டுபோய் இருக்கின்றனர். சாதாரண கால நிகழ்ச்சியை இராகு காலம், குளிகை காலமென்று செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது விட்டுவிடுகின்றனர். இதுபோன்ற மூட நம்பிக்கைகளால் நரபலியும் செய்கின்றனர். மக்களிடையேயுள்ள மூடநம்பிக்கைகளால் மந்திரவாதிகளும், தந்திரவாதிகளும் ஏழை மக்களை வருத்தி வருகின்றனர்... சரியை, கிரியை மூலமாக அழிவுறும் காலமும், செல்வமும், உழைப்பும், பொருளும் அளவற்று வீணாகின்றன. உழைப்பாளிகளின் உழைப்பின் பயன் யாவும் — இத்தகு காரியங்களால் வாழ்க்கை ஈனமாக இருந்துவருவது வியப்பல்லவா?

உலகில், அரசியல்துறையில் மக்கள் அடிமைத்தனம் நீங்கியதாக இல்லை; பொருளாதார நிலையிலும் அடிமைத்தனத்தை முதலாளித்துவ அரசுகள் நீக்கியதாக இல்லை. உலகம் ஜனநாயகத்தால் பயன் அடைந்ததாகவும் இல்லை; மத விஷயத்திலாகிலும் உலகில் பயனுண்டோவெனில் அதுவுமில்லை.

உலகில் இயற்கையிலும் செயற்கையிலும் உண்டாகும் செல்வங்களை இனிய உயிருக்கு எளிதில் பயன்படுத்திக் கொள்ளாமல், பலவித அடிமைத்தனத்தின் மேல் மக்கள் வைத்துள்ள மோகத்தால், இனிய உயிரை வதை செய்து கொள்ளும் காட்சி முதலாளித்துவ உலகில் இன்றுபோல் என்றுமே வளர்ந்து வரும்.''

* * *

தமிழ் நாட்டில் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒப்பற்ற சுயமரியாதை, சமதர்மக் கருத்துப் புரட்சி இன்றைய உலகினுக்கும் எத்துணை இன்றியமையாதது என்பதற்காகவே இந்நூலை வெளியிடுகின்றோம்.

சென்னை-1,
22-11-73.

எஸ். வி. சபாபதி
புது இலக்கியப் பதிப்பகம்

1925ஆம் ஆண்டில் கான்பூரில் நடைபெற்ற
இந்தியக் கம்யூனிஸ்டுகளின் மாநாட்டுத் தலைவர்
தோழர் ம. சிங்காரவேலு அவர்கள்



தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள்



காரல் மார்க்ஸ்

மூலதனம்

1

தனம் என்றால் என்ன?

தனம் என்றால் செல்வம், பணம் என்பார்கள். ஆனால், பொருளாதாரத்தில் தனம் என்ற சொல்லுக்குப் பணம் என்று பொருள் கொடுப்பதில்லை.

பணம் என்பது பண்டமாற்றுதலுக்குத் துணையாக இருக்கும் கருவி.

முன்னாளில் பண்டமாற்றுதலுக்குப் பணத்தின் உதவி இல்லாமலே இருந்து வந்தது. அதாவது ஒரு பண்டத்திற்கு மாற்றாக இன்னொரு பண்டத்தைக் கொடுத்து வாழ்க்கை நடந்து வந்தது.

ஆதிமனிதன் கையிலகப்பட்ட காய்கறிகளை உண்டு, கிடைத்த மரவுரிகளை உடுத்தி வாழ்ந்த காலத்தில், அவனுடைய வாழ்வு எளிமையாய் இருந்தது. பின் அவன், நதிகளின் பக்கங்களில் நிலைத்த வாழ்வு வாழ முற்பட தொழில் பாகுபாடு தோன்றுவதாயிற்று. தொழில் பாகுபாடு பெருகப் பெருக, மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களில் அவரவர்களின் அவசியத்திற்குத் தேவையற்றதைக் கொடுத்து, பிறரிடமிருந்து தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்விதம் நெல்லைக் கொடுத்து பருப்பும், பருப்பைக் கொடுத்து எண்ணெயையும், எண்ணெயைக் கொடுத்து துணிமணிகளையும், துணிமணிகளைக் கொடுத்து உப்பையும் மாற்றிக்கொள்ளும் முறையைப் பண்டமாற்று என்றனர். மனிதனுடைய தேவைகள் சொற்பமாயிருந்த வரையில் பண்டமாற்றல் எளிதாக நடந்தேறியது. அவனுடைய தேவைகள் 'நாகரிகம்' என்ற பாதையில் பெருகப்

பெருக பண்டமாற்று முறை வாழ்க்கைக்குப் போதியதாயில்லை.

பின் அகில உலக நாடுகள் பற்பல பொருள்களை உற்பத்தி செய்யத்தலைப்படவும், மக்களுக்குத் தங்கள் வாழ்க்கையின் சுகபோகத்திற்காகவும் பலவகைப் பண்டங்கள் வேண்டியதாய் ஏற்படவும், அதனைச் செய்யவும், பண்டங்களின் வகைகள் பலவாக அதிகரிக்கவும் ஏற்பட்டதால் பண்டமாற்றுதல் எளிதில் செய்ய முடியாமற் போயிற்று. அதனால் பணம் என்பதைக் கொண்டே பண்டங்களை விநியோகம் செய்ய நேரிட்டது.

உலகில் இன்று பணம் இல்லாமல் எந்தப் பொருளையும் பெற முடியாது. வாழ்விற்கு வேண்டிய பொருள்களைப் பணம் கொடுத்தே வாங்க வேண்டி வந்தது. பணம் காகிதப் பணமாகவும் இருக்கலாம்; அல்லது நாணயமாகவும் இருக்கலாம். எதற்கும் பணம் வேண்டும். இம்மாதிரி பற்பல இன்றியமையாத தேவைகளால் உலகப் பண்ட மாற்றுதலுக்குப் பணம் வேண்டியாதாய்விட்டது.

ஆனால், இந்தப் பணம் ஒரு கருவியேயொழிய முதல் அல்லது செல்வமாகாது.

தற்காலப் பொருளாதாரத் திட்டத்தில் 'தனம்', 'செல்வம்' என்பவை, பொருள்களுக்குக் கொடுக்கும் பெயர்களாகும்.

உலகில் விளையும் பொருள்கள் யாவும், உலகில் செய்யப்படும் பொருள்கள் யாவும் தனம் எனப்படும்.

ஆனல், மூலதனமென்றால் என்ன? இதனைக் கீழே காண்போம்.

மூலதன விளக்கம் :

மூலதனமென்பது செய்பொருள்களுக்கும், விளைபொருள்களுக்கும் ஆதாரமாயுள்ள தனமே மூலதனம் எனப்படும். செய்பொருளுக்கும், விளைபொருளுக்கும் மூலமாய் உள்ள தனம் எதுவென்றால், நாம் வாழும் பூமியே யாகும். இது தான் எல்லாத் தனங்களுக்கும் மூலாதாரமாய் உள்ளது.

எல்லாச் செய்பொருளும், எல்லா விளைபொருளும் ஆதிபூதமாகிய பூமியிலிருந்தே செய்யப்படுகின்றன. எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் சரி, நிலத்தில் விளையும் தானியமாயினும், அல்லது நிலத்தின் மேற்பரப்பில்

விளையும் புல், பூண்டு, மரங்களாயினும் சரி, எல்லாச் செய்பொருள் விளைபொருள்களும் பூமி யிலிருந்தே உண்டாகின்றன. நாம் உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், உறையும் வீடும் பூமியிலிருந்தே உண்டாகின்றன. நாம் ஏறும் வண்டியும், சாலையில் ஓடும் இரதங்களும், கடலில் மிதந்து போகும் கப்பல்களும், பூமி யிலிருந்தே செய்யப்படுகின்றன. உயிர்களை அழிக்கும் அம்பு வில்லாயினும், கத்தி கோடரி யாயினும், குண்டு பீரங்கியாயினும், அணு ஆயுதங்களாயினும் அனைத்தும் பூமியிலிருந்து பெறப்படும் பொருள்களிலிருந்தே செய்யப்படு கின்றன. ஆகவே, உயிருக்கே பூமி ஆதார மாகும். ஆதலின், எல்லாவித பொருள்களுக் கும் அதாவது உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் அனைத்திற்கும் இன்றியமையாத அடிப்படை பூமி என்பது வெள்ளிடைமலையாம்.

பூமி மனிதனுக்குச் சொந்தமா?

பூமியைப் படைத்தவன் ஒருவனுமில்லை. பூமி எவனுக்கும் சொந்தமில்லை. உலகில் உயிர் முளைப்பதற்கு முன்பே பூமி இருந்து வருகிறது. பூமியில் மனிதன் அண்மைக் காலத்தில் தோன்றியவன். இவனுக்கு மாத்திரம் பூமி எப்படிச் சொந்தமாகும்?

மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன் மற்ற உயிரினங்கள் யாவும் உலகைத் தத்தம் வசப்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. மனிதனைத் தவிர மற்றெல்லா உயிரினங்களும் உலகைத் தங்களுக்கென்று பங்கிட்டுக்கொண்டதாகவாவது தோன்றவில்லை. உலகில் மனிதன் ஒருவனே உலகை உனதென்றும், எனதென்றும் பங்கிட்டுக் கொண்டவனாகத் தெரிகிறது.

மண்ணுக்குப் போர் புரியும் உயிர்கள் மனிதனைத் தவிர எதுவுமில்லை.

மனித வர்க்கத்தின் இழிகுணம் :

மண்ணுக்குப் போர் புரிவதோடு, மண்ணால் செய்யப்பட்ட பொருளுக்கும் போர் புரிகின்றவன் மனிதன் ஒருவனே. ஆனால், மண் யாவர்க்கும் சொந்தமாயினும், மண்ணைக் கொண்டு செய்த பொருள்கள் செய்தவனுக்குச் சேரவேண்டியது நியாயமே. ஆனால், பொதுவான மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள், அதைச் செய்தவனைச் சேராமல், அதனைச் செய்யாதவனுக்குச் சேருவதுதான் விந்தையிலும் விந்தை !

இருவகை மூலதனம்

மூலதனம் பூமி என்றோம். இதுதான் ஆதி மூலதனம்.

இது இரண்டு வகைப்படும். அவை இயற்கை மூலதனம், செயற்கை மூலதனம் என்பன வாகும்.

இயற்கை மூலதனம் :

இயற்கை மூலதனம் என்னவெனில், பூமி யில் புதைந்து இருக்கும் பற்பல பொருள்களை இயற்கை மூலதனம் எனலாம். அவைகளாவன : மண், இரும்பு, கரி முதலிய உலோகங்கள் ; நீர், காற்று, மழை, ஆறு, அருவி, மலை முதலியன வாகும்.

மனித உதவியின்றிப் பூமியில் வளரும் செடி, புல், பூண்டு, காடு, பாலைவனம் முதலியவை யும் இயற்கை மூலதனம் எனலாம்.

இவைகள் யாவும் பூமியில் ஆதிமுதல் இருந்துவரும் இயற்கைப் பொருள்களாகும். இயற்கையாகவே இவைகள் யாவும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவாக இருந்துவர வேண்டி

யவையே. ஆனால், பற்பல காரணங்களால் இந்த இயற்கைப் பொருள்களைச் சிலர் கைப் பற்றி வர நேரிட்டது.

செயற்கை மூலதனம்:

இரண்டாவது செயற்கை மூலதனமாகும். அவையாவன: மனிதனால் செய்யப்பட்ட பொருள்கள் - வீடு, தோட்டம், அம்பு, வில், வண்டி, ஓடம், தானிய வகைகள், நாற்காலி, மேஜை, சோபா முதலியன.

எல்லாச் செய்பொருள்களும் விளைவு செய்யப்படும் பொருள்களும் செயற்கை மூலதனம் எனப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை மறந்துவிடலாகாது. அதாவது அனைத்துச் செயற்கை மூலதனங்கள் யாவும், சிற்சில இயற்கை மூலதனத்தால் செய்யப்பட்டவை என்று அறிதல் வேண்டும்.

சுருங்கக்கூறின், மூலதனம் என்பது பூமியே. அதில் உள்ள அனைத்துப் பொருள்களும் மூல தனம் எனப்படும். அவைகளில் சில இயற்கை மூலதனமாகவும், சில செயற்கை மூலதனமாக

வும் பிரிவுபட்டுள்ளன. ஆனல், பற்பல வரலாற்றுக் காரணங்களால் இவ்விரண்டு வகை மூலதனங்களும் பொதுவாகக் கருதப் பட்டு அனுபவிக்கப்படாமல் போனதை இனி ஆராய்வோம்.

2

மூலதனத்தை ஆங்கிலத்தில் Capital அதாவது ‘ முதல் ’ என்பார்கள். இந்த ‘ முதல் ’ என்பதை நாம் தமிழில் மூலதனம் என்று வழங்குகிறோம். இந்த மூலதனம் உண்டாகும் விதத்தை இனிக் காண்போம்.

மூலதனம் உண்டாகும் விதம் :

பூமி அதாவது நிலம், நீர் மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்பே உள்ளதாகும். மனிதன் இவ்வுலகில் தோன்றிப் பத்து இலட்சம் ஆண்டு கள் இருக்கலாம். இதற்கு முன்பு, சுமார் ஐம்பது கோடி ஆண்டுகளாக மனிதனைத் தவிர மற்ற

உயிரினங்கள் இவ்வுலகில் வழிவழியாக வாழ்ந்து வந்திருக்கின்றன. இந்தச் சொற்ப காலங்களாக மற்ற உயிர்களுக்கெல்லாம் நிலமும் நீரும் பொதுவானதாக இருந்து வந்திருப்பது வரலாற்று உண்மை. இன்றைக்கும் மற்ற உயிர்கள் யாவும் நிலத்தையும் நீரையும் பொதுவாகவே பயன்படுத்தி வருகின்றன. எப்பாதோ ஒரு குகையையோ ஒரு கூண்டையோ அந்தந்தச் சமயத்திற்குச் சிற்சில உயிர்கள் தங்களுடையதாகக் கொள்ளலாம். ஆனுல், நிலேயாக எந்த வேறு உயிரும் எப்பொழுதும் தனதாகக் குகையையோ கூண்டையோ கருதுவது கிடையாது.

மனிதன் மிருகத்தன்மையில் இருக்கும் பொழுதும் தற்கால தன் தூரப்பங்காளிகளாகிய காட்டு மனிதன் (*Orangwtang*) அல்லது கொரில்லா மனிதன் (*Gorilla*) நிலத்தையும், செடிகொடி மரங்களையும், அருந்தும் நீரையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டதாகக் காணவில்லே. காட்டில் உலாவித் திரியும் மனிதக் குரங்குகள் பழம் தரும் மரங்களையும், இலே தழைகளையும் தங்கள் சொத்தென்று கருதவில்லே. இதே மாதிரியாகத்தான் நமது முன்னேர்களாகிய குரங்கு வடிவம் படைத்திருந்த மனிதர்கள் நிலத்தின் பேரிலும், நீரின் பேரிலும்

சுதந்தரமாக உலாவிக் கொண்டு கிடைத்ததை உண்டு வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால், எந்தக் காலத்தில் நிலமும் நீரும் பொதுவாகக் கருதப்படாமல் தனிச் சொத்தாகக் கருத நேரிட்டிருக்கலாமென்றால், நிலத்தை உழுது பயிர் செய்யத் தலைப்பட்டதும், உழுத நிலத்தையும், விளைந்த பயிர் வகைகளையும் மனிதன் சொந்தமாக்கிக் கொண்டிருக்க வேண்டும். முதலில் உழுது பயிரிட்டவருக்குத்தான் நிலமும் பயிரும் சொந்தமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். இந்த நிலைமையில் சில ஊர்களில் உழுது பயிரிட்டவர்களுக்குத்தான், நிலமும் விளைந்த பொருளும் சொந்தமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. ஒரு காலத்தில் இரஷ்யாவில் 'மிர்' (*Mir*) என்ற திட்டப்படி உழைத்துப் பயிரிட்டவர்களுக்கே நிலமும் விளைந்த பயிரும் உரித்தாய் இருந்து வந்தன.

இதுபோலவே பாஞ்சால நாட்டிலும், ஆங்கிலேயர் வந்த பிறகும்கூட நிலமும் விளைந்த பொருளும் பொதுவுடைமையாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

மகாபாரத காலத்திலும், இராமாயண காலத்திலும் தனிச் சொத்துரிமை முதிர்ந்து

வந்திருந்ததாகத் தெரிகிறது. துரியோதனன், கிருஷ்ணனிடம், ''பாண்டவர்களுக்கு ஒரு கிராமத்தையேனும் கொடேன்'' என்று கூறும் போது தனிச் சொத்துரிமை அந்தக் காலத்தில் வழங்கி வந்திருக்க வேண்டும் என்று காண் கிறோம்.

புத்தர் காலத்திலும் விகாரங்களுக்குத் தனித்தனியாக நிலங்களையும், நீர்நிலைகளையும் தானமிட்டு வந்திருப்பதைக் கொண்டு, தனிச் சொத்துரிமை வழங்கி வந்திருத்தல் வேண்டும் என அறிகிறோம்.

தனிச் சொத்துரிமை வளர்ந்த விதம் :

இந்தத் தனிச் சொத்துரிமை எவ்விதமாக முதிர்ந்து வந்திருக்கலாம்? ஒரு காலத்தில் பொதுவாகக் கருதப்பட்டு உழைத்தவர்களுக்கே - உழுது பயிரிட்டவர்களுக்கே விளையும் நிலமும், விளைந்த பொருள்களும் சொந்தமாகக் கருதப் பட்டு அனுபவத்திலிருந்தது, உழைக்காதவர் களுக்கும், உழுது பயிரிடாதவர்களுக்கும் நிலமும் பொருளும் சொந்தமாக அனுபவிக்க நேரிட்ட விதம் எவ்வாறு? ஏறக்குறைய பொதுவுடைமை யில் இருந்துவந்த உலகம் தனிச் சொத்துரிமைக்கு மாறியது எவ்வாறு?

மக்களுக்குள் போர் புரிந்து ஒரு நாட்டை, மற்ருெரு நாட்டார் கைக்கொண்டதிலிருந்தே பூமியும் அதன் பொருள்களும் பொதுவுடமை யிலிருந்து தனிவுடைமைக்கு மாறின. அது எப்படியெனில், படையெடுத்து வந்து வென்ற தலைவன், வென்ற நாட்டையும் அதில் வாழ்ந்து வந்த மக்களையும், தன் போர் வீரர்களுக்கும், படைத் துணையாய் இருந்தவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவும், அதன் காரணமாக 'தனது', 'உனது' என்று நிலங்களும், வீடு களும், பொருள்களும் மாறின.

ஆங்கில நாட்டில் தற்காலம் வாழ்ந்துவரும் அநேக பிரபுக்களின் சொத்தெல்லாம் ஒரு காலத் தில் போரில் வென்றதின் காரணமாக வந்தவை என அறிக.

வெற்றி பெற்றதன் விளைவாக நிலங்கள் தனிச் சொத்தாயின. தோல்வியுற்ற மக்களும் அடிமைகளாயினர். வென்றவன் நிலத்திற்கும் அடிமைகளுக்கும் சொந்தக்காரனுக ஆனுன். தோல்வியுற்று அடிமைப்பட்டவர்கள் நிலத்தை யும் சுதந்தரத்தையும் இழந்து, கூலியாட்களாக வும், தொழிலாளிகளாகவும், வேலைக்காரர்களாக வும் (*Wage Slaves*) மாறினர்.

சுருங்கக்கூறின், வென்றவன் அனைத்திற்கும் சொந்தக்காரனாக ஆனான். தோல்வியுற்றவன் ஒன்றுமில்லாதவனாக ஆனான். இந்த வரலாற்றுக் காரணங்களால் பொது உலகம் தனி உலகமாக மாறியது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக இன்னொரு மாறுதலையும் நமது உலகம் அடைந்து வருகின்றது.

3

கிராம - நகர - நாடுகள் காலம் :

கிராமங்கள் கூடி நகரங்களாகவும், நகரங்கள் கூடி நாடுகளாகவும் மாறியதன் விளைவாகச் சிதறிக்கிடந்த மக்கள், நாடுகளைத் தத்தம் நாடுகளென்று கருதிக்கொண்டு 'உனது நாடு', 'எனது நாடு' என்று வழங்கிவரத் தலைப்பட்டனர்.

ஒரு காலம் கிராம காலம் என வழங்கி வந்தது. இந்தக் காலத்தில் கிராமங்கள் தலைமையாகக் கருதப்பட்டன. இதன் பிறகு நகரங்கள் தலைமையாகக் கருதப்பட்டு வந்தன.

இதன் பின்னரே நாடுகள் உண்டாயின. பிற்காலத்தில் பல நாடுகளை ஒன்றாகச் சேர்த்து (*Imperialism* என்று ஆங்கிலத்தில் வழங்கும்) ஏகாதிபத்தியப் பேரரசுகள் உண்டாயின.

கிராம அரசில் (*Village Governments*) கிராமம் தனித்த அரசாகவும், அதில் வாழ்பவர்கள் யாவரும் கிராம ஆளுகைக்கு உட்பட்டும் வாழ்ந்து வந்தனர்.

கிராம அரசில் செய் பொருள்களை அவனவன் கருவிகளைக்கொண்டு செய்து, விற்று, அவனே வாழ்ந்து வந்தான். நிலங்களைக் கிராம முழுமையுமே உழுது பயிரிட்டு, விளையும் தானியங்களை ஏறக்குறையக் கிராம மக்கள் அனைவருமே அடையும்படி தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். நாளடைவில் அந்தக் காலம் மாறியது.

அதன் பிறகு பல கிராமங்கள் பலவகையில் வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்று வந்ததனால் அந்தக் கிராமங்கள் அனைத்தும் ஒன்றுகூடி நகரங்களாக விரிவடைந்தன.

நகர காலத்தில் தனித்தனியாக கிராமங்களில் செய்துவந்த வேலைகளை, கூட்டுறவால்

சிலர் கூடிச் செய்யத் தலைப்பட்டனர். ஒரு தொழிலாளி, சில தொழிலாளிகளைக் கொண்டு, தான் ஒன்ருக இருந்து செய்துவந்த வேலையை, சிலருடைய உதவியால் அதிகரிக்கச் செய்து வந்தான்.

பாரத, இராமாயண காலத்தை இந்த 'நகர காலம்' என்றே அழைக்கலாம். கிரீஸ் முதலிய நாடுகளின் நகர காலமும் இந்த நகர அரசு காலமென்றே *(City Governments)* வழங்கி வந்தது.

இந்தக் காலத்தில் அயல் நாட்டு வாணிபம் பரவி வளரவும், உழைப்பவர்களுக்குச் செல்வாக்கும் அதிகரித்தது.

இதன் விளைவாகவே சில செல்வர்களும் தோன்றி வளர வாய்ப்பு ஏற்பட்டது.

மத்திய காலம் :

சில நூற்ருண்டுகளுக்குப் பிறகு வர்த்தகச் செல்வாக்காலும், வர்த்தகத்திற்காகச் சென்றவர்கள் அயல் நாடுகளைக் கைப்பற்றிய காரணத்தாலும் - நகரங்களை ஒன்ருகச் சேர்த்து, கைப்பற்றிய நாடுகளைக் குடியேறும் நாடாக வைத்துக்

கொண்டு சிறு நாடென்றும் பெரு நாடென்றும் கூறலானுர்கள். இதன் விளைவாகத் தனித்தனி யாகச் சிறு நாடுகள், பெரு நாடுகள் பெருக லாயின இந்த நிலைமை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் வரை நிகழ்ந்து வந்தது. இந்தக் காலகட்டத்தை 'மத்திய காலம்' என்று வரலாற்று ஆய்வாளர்கள் வழங்கி வரு கின்றனர்.

இந்த மத்திய காலத்தில் 'முதல்' என்றும், 'முதலாளி' என்றும் தோன்றவில்லை. இந்தக் காலத்தில் வர்த்தகம் முழுமையும் வணிகக் கூட்டமென்ற (*Guilds*) வர்த்தகக் கூட்டத் தாரால் செய் வேலைகள் பலவும் நடந்தேறி வந்தன.

இந்த வர்த்தகக் கூட்டத்தார் உழைப்பவர் களைக் கொண்டு பங்கு விகிதத்திற்கோ, வேலை செய்ததற்கு உரிய வெகுமதிக்கோ, செய்பொருள் களையும் விளைபொருள்களையும் உற்பத்தி செய்து வந்தனர்.

முதல் - முதலாளி - தொழிலாளி தோற்றம் :

இந்த மத்திய காலத்திற்குப் பிறகே, 'முதல்' என்றும், 'முதலாளி' என்றும், 'தொழிலாளி'

என்றும் தோன்ற ஆரம்பித்தனர். இந்தப் பொருளாதாரச் சொற்கள் தோன்றியது ஏறத் தாழ கடந்த இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே என்று கூறலாம்.

சென்ற முந்நூறு, முந்நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான் ஐரோப்பிய நாடு முழுமையும் வர்த்தகத்தில் அளப்பரிய வளர்ச்சியும் செல்வாக்கும் பெற ஆரம்பித்தது.

உலாந்தாக்காரர், டச்சுக்காரர், போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று தங்கள் தங்கள் நாட்டுச் செய்பொருள்களையும், விளை பொருள்களையும் அங்கங்கே சாதுரியமாக விற்று அயல் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டி, தங்கள் தங்கள் நாட்டிற்கு மிகத் திறமையுடன் கொண்டுவந்து நிறைத்து வந்தனர். இந்தத் திரண்ட செல்வத்தால் அந்தந்த நாட்டில் அநேக செல்வம் படைத்தோர் (பிரபுக்கள்) உண்டாயினர்.

அயல் நாட்டில் சுரண்டிய ஏராளமான செல்வத்தைக் கொண்டு அவர்கள் தங்கள் நாட்டில் பெரும் பெரும் தொழிற்சாலைகளை அமைத்து வந்தனர். இந்த நிலைமை நாளாவட்டத்தில் பெருகி வந்தது.

செல்வம் படைத்தோர் உள்நாட்டு விளை பொருள்களை உண்டாக்காமல், வெளிநாட்டு உணவுப் பொருள்களை வாங்க ஆரம்பிக்கவும், உள்நாட்டுக் குடிகளுக்கு விவசாய வேலையற்று தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தங்கள் தங்கள் கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

இவ்வாறாக பயிர் விளைவிக்கும் வேளாண்மைப் பணியை விட்டுத் தொழிற்சாலைகளில் கோடானுகோடி விவசாயிகள், குறைந்த ஊதியத்திற்குப் போய் நிறைந்தனர். வேளாண்மைத் தொழில்ல் ஊதியமே இல்லாமல் போக உழைப்பவர்கள் வாழ்வதற்கு வழியற்றுத் தத்தம் ஊரைவிட்டு நகரங்களுக்குச் சென்றதால், சுயேச்சையாக இருந்து உழைத்து வந்த உழைப்பாளிகள் கூட்டம் தொழிற்சாலைகளில் சென்று கூலிகளாக அமரும் நிலையும் ஏற்பட்டது.

இது முதற்கொண்டு நகரங்களில் முளைத்த தொழில்களாகிய கப்பல் கட்டுதல், இரெயில் ஓட்டுதல், சுரங்க வேலை செய்தல், துணி நெய்தல், மற்றும் வாழ்வதற்கு இன்றியமையாதனவான பொருள்கள் செய்தல் ஆகிய வேலைகள் பெருமளவில் உண்டாயின. அவை

களில் வேலை செய்யப் புகுந்தோர் கூலி ஆட்களாக ஆனார்கள். இந்தத் தொழிற்சாலைகளைப் படைத்தவர்கள் எல்லாம் பெரும் முதலாளிகள் ஆனார்கள்.

உழைப்போருக்கு ஏற்பட்ட கதி:

இவ்வாறாக, கூலிக்கு வேலை செய்தவர்கள் தொழிலாளிகளாகவும், தொழிற்சாலைகளைப் படைத்தோர் பெரும் முதலாளிகளாகவும் ஆனார்கள்.

இந்தக் காலத்தில் இட்டதைப் பெற்றுக்கொண்டு, பொருளாதார சுதந்தரத்தை இழந்து, தொழிற்சாலைகளுக்குச் சென்று அடிமைக் கூலியாகி வயிற்றுக்கு எட்டியும் எட்டாததுமாக வாழ்ந்துவர உழைப்போர்களுடைய கதி முடிந்தது.

ஆனால், கடந்த ஐம்பது ஆண்டுகளாக முதலாளிகளின் நிலைமை இன்னொரு மாறுதலை அடைந்தது. அது என்னவெனில், சர்வாதிகார அரசில், அதாவது *Imperialism* என்ற ஏகாதிபத்திய ஆட்சியில் முதலாளிகளுக்குச் சலுகைகள் அதிகமாகக் கிடைத்தன.

4

வாணிபத்தின் மூலம் நாடுகளைக் கைப்பற்றுதல்:

முற்காலங்களில் அந்தந்த நாடுகள் அதனதன் ஊர்களில் விளையும் பொருள்கள் அந்தந்த ஊரில் வாழ்ந்துவந்த மக்களுக்கே பற்றியும் பற்ருததுமாக இருந்து வந்தன. சில நாடுகளில் வியத்தகு பொருள்கள் செய்யப் பட்டு வந்ததால் அந்தப் பொருள்களை அயல் நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்யத் தலைப்பட்டனர். மேல்நாட்டுப் பொருள்கள், பெருமளவில் உண்டாகவும்; அந்நாடுகள் அவை

களைத் கீழ்நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்யவும் நேரிட்டது.

அதோடு, மேல் நாட்டுக்காரர்களுக்கு இன்னொரு நன்மையும் ஏற்பட்டது. அதாவது துப்பாக்கிக்கான வெடி மருந்து மேல் நாட்டில் கண்டுபிடித்த விஷயம் அவர்களுக்குத் தனித்த அனுகூலமாக இருந்து வந்தது.

கொலம்பஸ் *(Columbus)* என்ற மேல் நாட்டுக்காரன் அமெரிக்காவைத் தேடிச் சென்று அங்கு நாகரிகமடைந்திருந்த மெக்ஸிகர்களைத் தனது நாட்டு ஆட்சிக்கு உட்படுத்தினன். அதே மாதிரியாக வாஸ்கோடிகாமா *(Vascodegama)* கீழ் நாடுகளைத் தேடிச் சென்று நாம் வாழும் இந்திய நாட்டை மேல்நாட்டுக்காரர்களுக்குக் கீழ்ப்படியும்படி செய்துவிட்டான். அதனுல் கீழ்ப் படுத்தப்பட்ட-அடிமைப்படுத்தப்பட்ட நாட்டில் விளையும் பொருள்களை மலிவாக வாங்கவும் தங்களுடைய நாட்டின் பொருள்களை நல்ல விலைக்கு விற்கவும் நேரிட்டது. புகைவண்டி, மோட்டார், கப்பல், ஆகாய விமானம், முதலிய போக்குவரத்து வசதிகள் மேல் நாடுகளில் உண்டாகவும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கும், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக் கும் போகவும் வரவும் மிகுந்த போக்குவரத்து

வசதிகள் ஏற்பட்டன. வர்த்தகத்திற்காகச் சென்ற மேல் நாட்டுக்காரர்கள் கீழ்நாடுகளைத் தம் வசப்படுத்தி ஆளவும் வாய்ப்பும் வசதியும் உண்டாயிற்று.

வல்லரசுகள் தோற்றம்:

முதலில் மேல் நாடுகளின் தொடர்பு பொருளாதார முறையில் இருந்து வந்தது. நாளடைவில் தங்கள் நாட்டுக்குச் செல்வம் பெருமளவில் வந்து குவியக் குவிய அதற்குத் தகுந்த விருப்பமும் வல்லமையும் *(Spirit of Adventure)* பெற்று பிறநாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளும் துணிவும் உண்டாயிற்று.

இவ்விதமாக மேல் நாடுகளில் குடியேறும் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட வல்லரசுகள் *(Colonial Empires)* தோன்றின. இதனால் இந்த அரசுகளுக்கு உலகில் மிகுதியான செல்வாக்கு நிறைந்து வந்தது. ஆஸ்திரேலியா கனடா ஆப்பிரிக்கா கண்டங்களில் ஆங்கிலேய செல்வாக்கு நிறைந்து வந்தது. கொச்சின்-சைனா முதலிய இடங்களில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சலுகைகள் பல கிடைத்தன. இதே மாதிரியாக ஜெர்மனி, இத்தாலி முதலிய வல்லரசுகளும் உலாந்தா, போர்ச்சுகல் முதலிய

சிற்றரசுகளும் குடியேறும் நாடுகளில் பல சலுகைகளைப் பெற்றன.

இவ்வாறாக மேல் நாட்டுக்காரர்கள் மற்ற உலக நாடுகளைப் பங்கிட்டுக்கொள்ள வாய்ப்பு நேரிட்டது. இதன் மத்தியில் அமெரிக்கர்களும் அமெரிக்காவில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றனர். இவர்களும் தங்களுடைய செல்வாக்கைக் கொண்டு வர்த்தகத்தைத் தூரக்கிழக்குப் பகுதிகளில் நிலைநாட்டினர்.

இந்தச் சமயத்தில் ஜப்பானியர்கள் மட்டும் மேல்நாட்டு இரகசியங்களை அறிந்துகொண்டவர்களாதலால் தங்கள் புராதன பழக்க வொழுக்கங்களை விட்டுவிட்டு மேல் நாட்டு வல்லமையைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

இதன் விளைவாக, ஜப்பானியர்கள் தங்கள் நாட்டை ஒரு பெரும் வல்லரசாக மதிக்கச் செய்து கொண்டனர். இதன் பயனாக அவர்கள் சீனாவைத் தோற்கடித்தனர்; கொரியாவைக் கைப்பற்றிக் கொண்டனர்.

இத் தருணத்தில் ஜப்பான் நாட்டை ஒரு மாபெரும் வல்லரசாகக் கருத நேரிட்டது. மேலும், அவர்கள் குடியேறும் நாடுகளையும் தம் வசப்படுத்திக் கொண்டனர்.

இதன் விளைவாக, ஜப்பானியர்கள் தங்கள் வர்த்தகத்தை உலகம் முழுவதிலும் பரவச் செய்தனர். ஆசியா கண்டம் முழுவதிலும் அவர்கள் தங்களுடைய வாணிபத்தையும் ஏகாதிபத்தியத்தையும் வளர்க்கவும் நிலைநாட்டவும் முயன்றனர்.

இவ்வாறாக, முதலில் வர்த்தகத்தில் நுழைந்த நாடுகள் நாளடைவில் மாபெரும் வல்லரசுகளாக மாறின.

செல்வர்களின் ஆதிக்கம் வளர்ந்த விதம் :

குடியேறும் நாடுகள் மேல் நாடுகளுக்கும் ஜப்பான் நாட்டுக்கும் வந்து குவியவும், செல்வமும் அவரவர் ஊர்களில் வந்து குவிந்தன. இவ்வாறாக, பெருஞ்செல்வம் அந்தந்த ஊர் வர்த்தகர், பாங்கர், கப்பல் சொந்தக்காரர், இரயில் சொந்தக்காரர், ஆலைச் சொந்தக்காரர், பிரபுக்கள் முதலியோரிடம் வந்து குவிந்தது. இவர்கள்தான் முதலாளி என்பவர்கள் ஆவர்.

இந்த முதலாளிகள் ஏராளமான பணத்தைத் தங்கள் அரசுக்குக் கீழ்ப்படிந்த நாடுகளுக்கு அனுப்பி அங்கும் பெருஞ் செல்வத்தை

ஈட்டி வந்தனர். இவர்கள்தான் கோடீஸ்வரர் களென்றும், கோடி கோடீஸ்வரர் களென்றும் அழைக்கப்படுகின்றனர்.

தற்கால உலகம் இந்தப் புதிய செல்வந்தர் அரசாட்சிக்குட்பட்டு வருகிறது. செல்வம் படைத்த காரணத்தால் அந்தந்த ஊர் ஆட்சி யில் இந்தச் செல்வர்களுக்கும் முதலாளிகளுக் கும் மிகுந்த செல்வாக்கு உண்டு. அரச செல்வமும் இச் சிலரிடத்தே பெருமளவில் குவியவும், தொழிற்சாலைகளைத் தங்கள் விருப்பம் போல் உண்டாக்கிக் கொண்டு அதில் கோடிக் கணக்கான உழைப்பவர்களுடைய வாழ்க்கை ஆளும்படியாக நேர்ந்தது. இதைத்தான் பொருளாதாரக் கொள்ளை (*Economic Exploitation*) என்பர். இந்த நிலைமையைத் தான் உலகம் இன்று அடைந்து வருவதைக் காண்கிறோம்.

ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்ட உலகம்:

உலகம் இன்று அடைந்திருக்கும் ஏகாதி பத்திய ஆட்சியால் தேசியப் போட்டியும் (*National rivalries*), அயல் நாடுகளைக் கைப் பற்றும் அவசியமும் (*Subjugation of foreign countries*) தோன்றின. இதனால் உண்டாகும்

போர்களும் அளவற்றனவாகும். இதுதான் ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்ட உலகின் கதி எனில் மிகையாகாது.

உலகச் செல்வம் இவ்வாறுகச் சிலரிடத்தே குவிந்து கொண்டு வரவும், பல கோடி நூருயிர வராகிய பொதுமக்கள் பண்டைக் காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கும் சுதந்தரமும் குறைந்து, அவரவர்கள் அடைந்திருந்த செல்வத்தையும் இழந்து, ஆடுமாடுகளை விற்பனை செய்வதுபோல் தாங்களும் விற்பனைக்கு ஆளாக நேரிட்டது.

5

மக்களின் நிலை அன்றும் இன்றும் :

ஆதிகால மனிதர்கள் கிராமங்களில் வாழ்ந்து வந்தபோது ஒவ்வொருவரும் இருக்க இல்லமும், உடுக்க உடையும், ஒவ்வொருவரும் செய்யத் தொழிலும் பெற்றிருந்தனர். வேலை வாய்ப்பு சொற்பமானாலும் உழைப்பவனுக்கு வேலை இருந்தே வந்தது. அந்தந்த வகுப்பிற்குரிய வேலையில், அந்தந்த வகுப்பினர்களுக்குட்பட்ட வர்களுக்கு வேலை கிடைத்து வந்தது.

கருமார், தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், தோட்டி, அம்பட்டர், வாணியர்,

சக்கிலியர், வாத்தியக்காரர், நாட்டியக்காரர், கூத்தாடி, மருத்துவர், வைத்தியர், ஆசிரியர், குறவர், வில்லியர், வேடுவர், தட்டார், இடையர், கைக்கோளவர், வணிகர், செம்படவர் ஆகிய உழைப்பாளிகள் அவரவர்களுடைய உழைப்பின் பயனை அவரவர்களே அடைந்து மனநிறைவுடன் வாழ்ந்து வந்தனர். அவரவர் களுக்குரிய வேலை சுதந்தரமும் பெற்றிருந்தனர். வேலை செய்ய மனமில்லாத சோம்பேறியைத் தவிர மற்ற கிராமவாசிகளுக்கெல்லாம் தொழில் என்றுமே இருந்து வந்தது. வேலையின்மை என்ற நிலைமை பண்டைக்கால மக்களுக்கு ஏற்படவில்லை.

இவர்கள் செய்துவந்த வேலையின் பயனை இவர்களும் இவர்களது குடும்பத்ினரும் அடைந்து வந்தனர். அக்காலத்தில் நெசவு முதலிய தொழில்கள் மூலமாக உண்டான பொருள்களை அயல் நாடுகளுக்குக் கொண்டு போய் விற்றுவந்த சில வணிகரும் இருந் தனர்.

அக்கால கிராம மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள், ஆடையணிகள் கிடைத்து வந்தன. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அவர் கள் மனநிறைவுடன் தங்கி வாழத் தனிமை

யான வீடுகள் அமைக்கப் பெற்றிருந்தனர். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல போக்குவரத்திற்கு வேண்டிய வசதிகள் சிறிதள வாக இருந்தாலும் அவரவர்கள் தனித்தனியே பெற்றிருந்தனர்.

பெரும்பான்மையோர் உழைத்து வந்த நிலங்களும் பொதுவாகவே கருதப்பட்டு அந்த நிலங்களின் மூலம் கிடைத்த பயனை அவர்கள் பொதுவாகவே அனுபவித்து வாழ்ந்து வந்தனர். ஒரு மனையைத் தற்காலத்தில் நூறு பேர் பங்கிட்டுக் கொண்டு அற்ப வாழ்க்கையை நடத்தி வருவது போல் முன்னுளில் இல்லை. கிராம முழுமையுமே அதற்குரிய நிலங்களைப் பொதுவாக கிராம மக்கள் உழுது பயிர் செய்து விளைவைப் பொதுவாக அனுபவித்து வந்ததாகத் தெரிகிறது.

இந்திய நாட்டிலும் குறிப்பாக பாஞ்சாலத்திலும், இரஷ்யா முதலிய மேல் நாட்டிலும் நிலம் பொதுவாகக் கருதப்பட்டு வந்ததாக அறிகின்றோம்.

ஆதிகால மக்களின் வாழ்க்கை சொற்ப மாயினும் சுதந்தரத்தையும் சுபிட்சத்தையும் பெற்றிருந்தது. அவனவனுடைய வேலை

அவனவனுக்குச் சொந்தமாயும், அவனவனுடைய கருவி அவனவனுக்குச் சொந்தமாயும், அவனவன் சுதந்தரம் அவனவனுடையதாகவும் ஒருவித மனநிறைவைத் தருவதாய் இருந்து வந்ததாக எண்ணலாம்.

பல்லாண்டுகளாக இருந்து வந்த வாழ்க்கை நாளடைவில் மாறத் தலைப்பட்டது. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்ற பாடமும் சிலர் மனத்திற்குள் புகுந்து, அதற்கேற்ப அவர்கள் அயல் நாடுகளுக்குச் செல்ல முனைந்தனர். இதன் விளைவாக உலகில் வர்த்தகம் விரிவடைந்து வளர்ந்துவரத் தலைப்பட்டது.

நகரங்கள் தோற்றம் :

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் வர்த்தகம் அதிகரிக்கத் தொடங்கியதன் விளைவால் செல்வம் பெருகியது. இதன் விளைவாக, நகரங்கள் உண்டாயின என்றோம்.

நம் இந்திய நாட்டில் பாடலிபுரம், அஸ்தினபுரம், பூம்புகார் முதலிய சிற்சில நகரங்கள் தோன்ற ஆரம்பித்தன. நகரங்கள் விரிவடையவும், பெருகவும் சிறுபான்மைப் பொருள் படைத்

தோரும், பெருஞ் செல்வர்களும் தோன்ற ஆரம்பித்தனர்.

இவ்விதச் செல்வப் பெருக்கால், பலபேர் தனித்தனியாகச் செய்து வந்த சிற்சில தொழில்கள் வேறு சிலர் ஆதிக்கத்தில் வரத் தொடங்கின. இதுதான் 'முதலாளி' முதன் முதலில் உண்டான ஆரம்பமாகும்.

இவர்கள்தான் காலப்போக்கில் நமது தற்காலப் பெரும் முதலாளிகளாக மாறி வந்தவர்கள் ஆவர்.

முதலும் கருவிகளும் :

இவ்விதத் திட்டத்தில் ஒருவன் முதலையும் அதனைச் சேமிக்கும் கருவிகளையும் படைக்கப் பெற்றான். முதலும் கருவிகளும் ஒருவனிடத்தே தங்க, அம் முதலை மேலும் மேலும் பெருகச் செய்யும் உழைப்போரும் தங்கள் தங்கள் முதலையும் கருவிகளையும் இழந்து, தங்கள் தங்கள் சுதந்தரப் பேற்றையும் இழந்து முதலாளிகள் கொடுத்த கூலியைத் தங்கள் உழைப்பிற்காகப் பெறத் தலைபட்டனர்.

இவர்கள்தான் தற்காலத் தொழிலாளர் களுக்கு மூதாதையர்கள் ஆவார்கள்.

உலகம் இவ்வித நிலைமையில் பல நூற்றாண்டுகள் இருந்து கொண்டே வந்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் சிற்சில நகரங்கள் சேர்ந்து நாடுகளாக மாறினதைக் கண்டோம். நாடுகள் தோன்றவும் அந்தந்த நாட்டில் வாழும் மக்களுக்குக் குடும்பப் பற்றைப் போன்ற தேசியமும் தோன்றலாயிற்று. இந்தத் தேசியம் வளர வளரப் போட்டி, பகைமை, அவா, வெற்றியில் மோகம் ஆகியவை துணை கொண்டன

இதன் விளைவால் போட்டியும், பொறாமையும், போரும் ஆங்காங்கு தோன்றி அதிகரித்து வந்தன. வெற்றி கொண்ட நாடுகள் தோல்வியுற்ற நாடுகளின் செல்வங்களைக் கைப்பற்றின. செல்வம் மிகுதியாக அடைந்ததன் பயனைகத் தோற்றவனை உழைப்பாளியாக ஆக்கியும் அவனுடைய செல்வத்தைக் கைக்கொண்டும் அவனைக் கூலிக்காரனென்ற நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. வெற்றி கொண்ட சில குடும்பங்கள் மாத்திரம் வெற்றியின் முழுப் பயனை அடைந்தன.

செய்பொருள் நிறுவனங்களுக்கு அடிப்படை :

இந்த வெற்றிகளுக்கு உதவியாய் இருந்த சாமானிய மக்கள் யாவரும் கூலிக்கு உழைப்பவ

ராயினர். இந்த வெற்றியின் பெருக்கால் அடைந்த செல்வம் குவியக் குவிய சிற்சில குடும்பங்களே எல்லாச் செல்வத்தையும் கவர்ந்து கொண்டன. தோல்வியுற்ற நாடுகளிலிருந்து செய்பொருளும் விளைபொருளும் வென்ற நாட்டிற்கு வந்து சேர, வென்ற நாடு செல்வப் பெருக்கிலும் வன்மையிலும் அதிகரித்து விளங்க நேரிட்டது. தோல்வியுற்ற நாடுகளிலிருந்து விளைபொருள்கள் வெற்றி அடைந்த நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்டு செய்பொருள் களாக மாறத் தலைப்பட்டன. இதுதான் தற்காலச் செய்பொருள் நிறுவனங்களுக்கு அடிப்படையாகும். இவைகளைத்தான் தற்காலத்தில் ஆலையென்றும், தொழிற்சாலையென்றும், கப்பல் கட்டும் தளமென்றும், இயந்திரத் தொழிற்சாலையென்றும் அழைக்கின்றோம். இத்தகையத் தொழிற்சாலைகளைச் சொந்தமாகப் பெற்ற பெரும் முதலாளிகள் தங்கள் தங்கள் நாடுகளிலும் இதுபோன்ற பல்லாயிரம் வேறு பல தொழில் நிறுவனங்களைத் தோற்றுவித்துக் கொள்ளவே, இதில் உழைக்கும் பல கோடி நூறுயிரவர் கேவலமான கூலிக்காரர்களாக மாறினர்.

* * *

பொதுவுடைமை அறிக்கை :

முதலாளித்துவம் இருக்கும் வரை தொழிலாளரும், முதலாளியும் விரோதமாகவே கருதப்படுவர். இந்த முரண் உலகினின்று ஒழிய வேண்டுமானல் முதலாளித்துவம் ஒழிய வேண்டும். இந்த முரண் இருக்கும் வரை, முதலாளியும் தொழிலாளியும் முரண்பட்டே நிற்பர்.

முதலாளி ஒழிந்த மாத்திரத்தில் உலகம் உழைப்போர் மயமாக நின்று, சாந்தமும் சமாதானமும் அடைந்து நிற்கும். இந்தக் கருத்துக்கள் அடங்கிய மாபெரும் அறிக்கை *The Communist Manifesto* என்ற பொதுவுடைமை அறிக்கையாகும். இதனைக் காரல் மாக்ஸும், அவரது இணைபிரியா தோழருமாகிய பிரடெரிக் எங்கல்ஸும் உலகிற்கு விடுத்தார்கள். இந்த அறிக்கையைத்தான் 'தொழிலாளர் வேதம்' என்பார்கள்.

மூலதனம் பொது

ப. ஜீவானந்தம்

(சொல்லத் தொடங்கு முன்னே என்ற இசை)

மூலதனம் பொதுவே – தொழில்முறை
முயற்சிகளும் பொதுவே
ஞாலமுற்றும் பொதுவே - எனுங் கொள்கை
நாட்டு மின்பலோகம்
கால நிலையுணர்ந்தோர் - மேதையர்
கட்சிக் கொள்கை யிதுவே
பாலை நிலவாழ்வு – தழைத்திடும்
பைம்பூஞ் சோலையென்ன. (மூலதனம்)

சொத்துரிமைச் சீக்கு – செய்கேடு
சொல்லுந் தரத்ததுவோ ?
பித்த மனிதரைப்போல் – உலகினைப்
'பேயாட்'டாட்டு தன்றோ !
சுத்த அநியாயம் – கொடுங்கோல்
சோம்பல், யுத்தம், வறுமை
எத்தும் பிழைப்படிமை – தனிஉடைமை
ஈன்ற நச்சுச் சிசுக்கள். (மூலதனம்)

மாந்தர் விலங்குகளோ – கழுகுபோல்
வதைத்திழுத் துண்ணுகிறார்
ஒந்திபோல் வேஷத்திலே – அட்டைபோல்
உறுஞ்சுறார் உதிரம்
சாந்தப் பசுப்போலே – சூழ்ச்சியில்
சதிகளில் நரி வெட்கும்
சோர்ந்திடும் தேவாங்காய் – பவிசிலும்
சுணங்களில் தாழ்கின்றார். (மூலதனம்)

கடவுளுங் காக்கவில்லை – நீதிசொல்
'கவர்மெண்டுங்' காக்கவில்லை
படைகளும் காக்கவில்லை – பாழ்மத
பக்தியும் காக்கவில்லை
'குடுகுடு' கிழமான –பழமையைக்
கும்பிட்ட பலனிதுதான்
உடைந்த மனத்திற்கிங்கே – வழியினி
ஒன்றே சமதர்மம். (மூலதனம்)

பூச்சி புழுக்களுக்கே – வாழ்வினில்
புசிப்பதில் கவலையுண்டோ ?
'ஈச்சை' களீட்டியதோர் – தேட்டையை
இன்புற உண்ணலையோ ?
'ஏச்ச' மனிதர் வாழ – உழைப்பவன்
ஏங்கச் சகிப்பதுவோ ?
ஓச்சுக, போர் முரசு – பெற்றிடுக
உலகப் பொதுஉடைமை. (மூலதனம்)

கீழ் நாடுகள் : : : அடிமைப்பட்ட வரலாறு

காரல் மார்க்ஸ்

"அமெரிக்காவில் தங்கமும், வெள்ளியும் என்று முதல் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டதோ அன்றே முதலாளித்துவமானது முதல் முதலாக உலகத்தில் துளிர்க்கத் தலைப்பட்ட காலமாகும்."

இதைக் குறிப்பிடுவதற்கான இரண்டொரு தனித்த சம்பவங்களும் உண்டு.

கிழக்கிந்தியத் தீவுகளை படையெடுத்துக் கொள்ளைகொண்டு அப்பிரதேச மக்களை அடிமை

களாக்கி,கட்டாயப்படுத்தி, சுரங்கங்களில் வேலை வாங்கியதும்; ஆப்பிரிக்க நாடு முழுவதையும் 'மனித வேட்டைக்குரிய' இடமாகச் செய்து நீக்ரோ மக்களை வேட்டையாடிப் பிடித்து அவர் களின் கரிய உடம்புத் தோலை உரித்து வியாபாரம் செய்த கொடிய சம்பவங்களும் எளிதில் மறக்கக் கூடியதல்ல.

இதைப் போன்ற மிருகத்தனமான சம்பவங் கள் ஏராளமெனினும் முதலாளித்துவத்தோர் துவக்க நிலையில் என்ன தன்மையுள்ளவர்களாய் இருந்தனர் என்பதற்கு மேற்கண்ட எடுத்துக் காட்டுகளே போதுமானதாகும்.

பிறகு ஏற்பட்ட போர்களோ பலவாகும். இவைகளுக்கு முக்கிய காரணம் கீழ் நாடுகளை கொள்ளையடிப்பதில் யார் முந்துவது என்றதால் ஐரோப்பியர்களுக்குள் ஏற்பட்ட போட்டியும் பொறுமையுமாகும்.

'நெதர்லாந்து' மக்கள் ஸ்பானியரின் ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளு வதற்காகச் செய்த புரட்சி நாளடைவில் முற்றி, ஆங்கிலேயர்களுக்கும் ஜோகோபியர்களுக்கும் இடையே பெரும் போராக மாறியதும்; இன்று சீனுவோடு ஆங்கிலேயர் செய்யும் 'அபின் சண்டையும்' இதன் ஆரம்ப நிகழ்ச்சிகளாகும்.

உலகத்தில் முதலாளிகளின் கொள்ளை, முதல் முதலாக ஆரம்பிப்பதற்கு வழிகாட்டிய பெருமை 'ஸ்பெயின்' நாட்டிற்கே உரியதாகும்.

பின் அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றியே, போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து முதலான நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருக வெளிக் கிளம்பின.

உலக நிகழ்ச்சிகளைக் கண்டு உற்சாகங் கொண்ட ஆங்கிலேய முதலாளிகள், பதினேழாம் நூற்ருண்டின் இறுதியில் ஒன்றுகூடி ஆலோசித்து கூட்டு வியாபாரத்திற்கானதோர் ஒற்றுமையுணர்வை தங்களுக்குள் உருவாக்கிக் கொண்டனர்.

அவர்களுடைய திட்டம் விரிவானது. அதன்படி ஆங்கில அரசியல் ஆதிக்கம் முழுதும், முதலாளிகள் கைவசப்பட்டதாகச் செய்ய வேண்டுமென்பதோடு, குடியேற்ற நாடுகளைப் பெருக்கி, தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் புதியதோர் உயிரும் சக்தியும் ஏற்படுத்தவேண்டு மென்பதுமாகும்.

இத் திட்டத்திற்கு அனுசரணையாகவே இதுகாரும் பல சிறு விவசாயிகளிடையே சிதறுண்டு

கிடந்த நிலங்களையெல்லாம் ஒரு சில நிலச்சுவான் தார்கள் ஆதிக்கத்தில் குவியும்படியாகச் செய்து முதலாளித்துவ முறையில் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க ஆரம்பித்தனர். அதோடு பல தந்திரங்களால் அரசியலில் ஆதிக்கத்தையும் கைப்பற்றி நாட்டை தங்கள் விருப்பம்போல் ஆட்டுவித்தனர். தேசியக் கடனென்றும், வியா பாரப் பாதுகாப்புச் சட்டங்களென்றும், அநேக புதிய விஷயங்களெல்லாம் வெளிக்கிளம்பியது. நவீன வரிவிதிப்புத் திட்டமும் அப்பொழுதுதான் மூதன் முதலாக உருப்பெற்றது.

முதலாளிகள் தங்கள் திட்டங்களை நிறை வேற்றுவதற்கு பெரும்பாலும் மிருக பலத்தையே நம்பியிருந்தனர். ஆயினும், உள்நாடு சம்பந்தப் பட்டவரை, அரசியலில் தங்களுக்கிருந்த செல்வாக்கைக் கொண்டு அரசின் உதவியைப் பெற்று, பொதுமக்களின் ஆதரவு ஏற்படுவதற் கான வழிவகைகளை செய்து எவ்வித நிலைமை களையும் சமாளிக்கலாயினர்.

கிறிஸ்துவ மத ஆராய்ச்சியில் தலையாய வராகக் கருதப்படும் வில்லியம் ஹோவிட் என்பார் தமது 'குடியேற்றமும் கிறிஸ்தவமும்' என்ற நூலில் ஐரோப்பிய முதலாளிகள் செய்த கொடுஞ் செயல்களைப் பற்றி வெகு விரிவாக எழுதியிருக்கிறார். அந்நூலில் ஒன்பதாம் பக்கத்

தில் காணும் ஒரு சிறு குறிப்பே நமது தேவைக்குப் போதுமானது.

அதாவது "கிறிஸ்துவ மத பக்தர்களென்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தார் தங்கள் குடியேற்ற நாடுகளைப் பெருக்கிக் கொள்வதற்காக – உலகில் எங்கெங்கு மக்களினத்தை அடக்கி ஒடுக்கி ஆளமுடிந்ததோ அங்கெல்லாம் – அவர்கள் செய்த மிலேச்சத்தனமான அடாத செய்கைகளைப் போல் வேறு எந்த வகுப்பாரும் எவ்வளவுதான் கொடியராகவும், முழு மூடராகவும், ஈவிரக்கமற்ற, மானமற்றவர்களாக இருந்தவர்களுங்கூட அவ்வளவு கொடிய செய்கைகளையெல்லாம் செய்திருப்பார்கள் என்று சொல்லுவது இயலாததாகும்" என்று | குறிப்பிடுகிறார். [இதன் விரிவை வில்லியம் ஹோவிட் அவர்களின் புத்தகத்தைக் கொண்டு அறிந்து கொள்ளவும்.]

பதினேழாம் நூற்றாண்டில் ஹாலந்து நாடே கொழுத்துப் பருத்த முதலாளித்துவம் குடி கொண்டிருந்த இடமாகும்.

அது பல நாடுகளைப் பலவந்தமாகக் கைப்பற்றி, குடியேற்றி, நிர்வாகம் செய்துவந்த வரலாறு முழுதும் வெறும் வஞ்சகம், இலஞ்சம், சூழ்ச்சி, படுகொலை முதலான இழிதன்மை

யான செய்கைகளே நிறைந்துள்ளதாகக் காணலாம்.

ஜாவா தீவிற்குத் தேவையான அடிமைகளைச் சேகரிப்பதற்காக ஹாலந்து நாட்டு முதலாளிகள் கையாண்ட முறை ஈவிரக்கமற்றதாகும்.

வீதியில் நிற்பவர்களை திடீரென்று தூக்கிச் சென்று விடுவார்கள். அதற்கென தடியர்கள் நிறைந்த பல கூட்டத்தினர் பழக்கப்படுத்தப் பட்டு கூலிக்கு அமர்த்தப்பட்டிருப்பர். அப்படித் திருட்டுத்தனமாகப் பிடிக்கப்பட்டோர் அடிமைகளாக ஜாவாவுக்கு ஏற்றுமதி செய்வதற்குமுன் நூற்றுக்கணக்கானவர்களைக் கேவலம் பூச்சி புழுக்களைவிட கேவலமாக மதித்துச் சிறுசிறு இருட்டறைகளிலும், பாதாளக் கிடங்குகளிலும் சிறை வைக்கப்படுவார்கள். இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு அறிக்கை கூறுவதாவது:

"இந்த மாக்காசர் நகரத்தை மட்டும் எடுத்துக்காட்டாக எடுத்துக் கொண்டால், இதன் எல்லைக்குள்ளாகவே பலவந்தமாக தங்கள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்ட எண்ணற்ற துர்ப்பாக்கிய மக்கள் பேராசைப் பெரும் பேய்க்கு இரையாகி இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு இரகசியமான இருட்

டறைகளில் திணிக்கப்பட்டுக் கிடக்கின்றனர் என்ருல், ஹாலந்து நாட்டு முதலாளிகள் தங்கள் அரசாங்கத்தை எவ்வளவு செயலற்றதாகச் செய்துவிட்டனர் என்பது ஒருவாறு விளங்கும்.'

மற்றும், மலாக்கா பிரதேசத்தை டச்சுக் காரர்கள் தங்கள் வசப்படுத்துவதற்காக முனைந்து 1641ஆம் ஆண்டு அங்கு நிர்வாகத்தை நடத்தி வந்த போர்ச்சுகீசிய கவர்னரைக் கண்டு அவருக்கு இருபத்திரண்டாயிரம் பவுன் இலஞ்சம் கொடுப்பதாக ஆசை வார்த்தைகளால் மயக்கி, மலாக்கா நகரத்திற்குள் நுழைய அனுமதி பெற்று, அன்றிரவே இரகசியமாகக் கவர்னரைக் கொலை செய்து, கொடுக்க வேண்டிய இலஞ்சத் தொகையினை மீதப்படுத்திக் கொண்டனர் என்பதும்; இன்னும் இதுபோன்ற அடாத செய்கைகளும் பொதுவாக அவர்கள் அடிவைத்த இடங்களிலெல்லாம் இப்படியே, கொள்ளைக்கும் கொலைக்கும் நிலைக்களமாகச் செய்து கொண்டார்கள் என்பதும் வரலாற்று உண்மையாகும்.

1750ஆம் ஆண்டில் ஜாவாவின் ஒரு பகுதியாகிய 'பஞ்சுவான்சி' பிரதேசத்தில் மட்டும் எண்பதிணுயிரம் மக்கள் வரையில் வாழ்ந்து வந்தார்கள். பிறகு டச்சுக்காரர்கள் அங்குக் காலடி எடுத்துவைத்த ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாக அப்பகுதியின் மக்கள்

தொகை பதினெண்ணுயிரத்துக்குக் குறைந்த தென்றல் டச்சுக்கார முதலாளிகளின் 'மனித வியாபாரம்' எவ்வளவு விமரிசையாக இருந் திருக்க வேண்டும்!

நிற்க, ஆங்கிலேய முதலாளிகள் தாங்கள் போட்ட திட்டப்படியே பலவித சூழ்ச்சிகளால் நாளடைவில் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் இந்திய அரசியல் ஆதிக்கத்தை தங்கள் கைவசப் படுத்திஞர்கள் என்பதும், இந்தியத் தேயிலே வியாபாரத்திலும், மேல் நாடு, கீழ் நாடுகளுக் கிடையே உள்ள கப்பல் போக்குவரத்து சாதனங்களிலும், சீன வியாபாரத்தின் பெரும் பகுதியிலும் ஏகபோக உரிமைகளை எப்படிப் பெற்ருர்கள் என்பதும் யாவரும் அறிந்ததாகும்.

அவை ஒருவாறிருக்க, இந்திய உள்நாட்டு வியாபாரங்களைக் கம்பெனியின் உயர் அலுவலர் களே ஆதிக்கம் செய்து இந்தியச் செல்வத்தைச் சுரண்டியது பெரும் மோசடியாகும்.

அடின், வெற்றிலே பாக்கு, உப்பு முதலான பல விளைபொருள்களுக்குக் கம்பெனியின் உயர் அதிகாரிகளே தங்கள் விருப்பம் போல் சூழ்நிலைக் கேற்ப மார்க்கெட் விலைகளை நிர்ணயிப்பதற் கான அதிகாரத்தைப் பெற்றிருந்ததால், அந்த அதிகாரத்தைப் பலவிதத்திலும் தவருன வழியில்

செய்து தங்கள் சொந்த பைகளை ஒவ்வொரு கம்பெனி அலுவலரும் நிரப்பிக்கொண்டதானது பெருத்த மோசடியான செயலாகும். இதில் இந்திய கவர்னர் ஜெனரலும் இரகசியமாகக் கலந்து கொள்வது உண்டாம். எனினும், அவர்கள் பெரும்பாலும் வேறு வழிகளிலும் பேரம் செய்வது உண்டு. அதாவது, பெரும் பெரும் வியாபார ஒப்பந்தங்களைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பார்த்துக் கொடுப்பதும், அவர்களோடு இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ளுவதும் சர்வ சாதாரணம்.

இதுபோன்ற அநேக ஊழல்கள் இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பார் தமது பதவித் திமிரால் செய்த பல அடாத செயல்களுக்காகப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தபட்ட போது வெளிவந்தன.

அவற்றுள் ஒரே ஒரு சம்பவம் மத்திரம் — கம்பெனி அலுவலர்கள் அடித்த ' இலாப 'த்தின் அளவை விளக்கப் போதுமானது.

ஒரு சமயம், கவர்னர் ஜெனரல் அபின் ஒப்பந்தம் ஒன்றைப் பெரும் தொகையைப் பெற்றுக்கொண்டு ' சுலைவான் ' என்ற அதிகாரிக்குக் கொடுக்க, அவன் பிறகு எதிர்பாராத விதத்

தில் அபின் பழக்கமில்லாத வேறு பிரதேசத்திற்கு உத்தியோக முறையில் மாற்றப்படவே, தன் ஒப்பந்தத்தை வேறு ஒரு 'பின்' என்பவனுக்குப் பெரும் இலாபத்தோடு நாற்பதினாயிரம் பவுனுக்கு விற்க நேர்ந்தது. அதே நாளில் 'பின்' என்பவன் பல கிராக்கிகள் ஏற்பட்டதை முன்னிட்டு இன்னொருவனுக்கு அந்த அபின் ஒப்பந்தத்தை அறுபதினாயிரம் பவுனுக்கு விற்றான். கடைசியாக வாங்கியவன் அந்த ஒப்பந்தத்தை ஒழுங்காக நிறைவேற்றிய பிறகும், பெருத்த இலாபம் பெற்றதாக ஒரு சந்தர்ப்பத்தில் சாட்சியம் கூறுகிறான்.

கவர்னர் ஜெனரல் சம்பந்தப்பட்ட விஷயமே இவ்வாறிருக்க மற்ற அலுவர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்ட சில புள்ளி விவரங்களைக் கொண்டு 1757ஆம் ஆண்டு முதல் 1766ஆம் ஆண்டுகளுக்குள்ளாக மட்டும் கம்பெனியும் அதன் அலுவலர்களும் இந்தியர்களிடமிருந்து இனமாகப் பெற்றது மாத்திரம் ஏறத்தாழ அறுபது இலட்சம் பவுன் என்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், கணக்கில் அகப்படாமல் போனவைகள் எவ்வளவோ?

— 'காபிடல்' முதல் தொகுதி.

இந்தியாவைப் பற்றிய கடிதம்

காரல் மார்க்ஸ்

[1853ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாள் இலண்டனிலிருந்து எழுதப்பட்டது.]

I

இந்துஸ்தானம், ஆசியப்பகுதியில் இத்தாலி நாட்டிற்குச் சமமாக இருந்து வருகிறது. இயற்கை அமைப்பில் இரு நாடுகளுக்கும் பெரும் ஒற்றுமைகள் உண்டு. இத்தாலியின் ஆல்ப்ஸ் மலையை இந்திய நாட்டின் இமய மலைக்கும், லம்போடியன் சமவெளியை வங்காளச் சமவெளிக்கும், அபினைன் பீடபூமியைத் தட்சிண பீடபூமிக்கும் ஒப்பிடலாம். இத்தாலிக்கு ஒரு சிசிலித் தீவு இருப்பது போல் இந்திய நாட்டிற்கும் இலங்கைத் தீவு இருந்து வருகிறது. நீர்வள நிலவளங்களிலும் இரு நாடுகளும் சிறந்து விளங்குகின்றன. நிலைகுலைந்த அரசியல் அமைப்பிலுங்கூட இரு நாடுகளுக்கும் ஒற்றுமை உண்டு.

இத்தாலி எப்படி அந்நியர்களின் படையெடுப்பாலும், அநீதியின் செயல்களாலும் சிதறுண்டு பல்வேறு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டதோ, அதுபோன்றே இந்திய நாடும் முகமதியர், முகலாயர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆதிக்கத்திற்கு உட்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே, சுதந்தரமான பல்வேறு தனி அரசுகளாகப் பிரிந்து ஒற்றுமை குலைந்து இருந்து வந்திருக்கிறது. ஆனால், சமூக சமுதாய விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவைக் கீழ்த்திசை இத்தாலி என்று அழைப்பதை விட கீழ்த்திசை அயர்லாந்து என்பதே மிகப் பொருந்தும்.

*　　　*　　　*

இத்தாலியும் அயர்லாந்தும் நூதனமாகக் கலந்த ஒரு நிலைமையை உடையதே இந்திய நாடு. அது இத்தாலியின் காமிய போக போக்கியங்களையும், அயர்லாந்தின் துன்பத்தையும் வறுமையையும் ஏககாலத்தில் உடையதோர் உலகம். இந்நிலை இந்திய நாட்டின் பண்டைய மத சம்பிரதாயங்களிலிருந்தே எதிர்பார்க்கக் கூடியதாகும். இந்து மதம் காமிய போக போக்கியங்களைப் பெருமிதமாக வளர்க்கக்கூடியதாகவும், உடலை வருத்தி, உலகை வெறுத்து, உன்மத்தமாகச் செய்யும் துறவுநிலையை வற்புறுத்தக் கூடியதாகவும் ஏக காலத்தில் இருந்து வருகிறது. இலிங்கத்தை வணங்குவது இந்து மதம்.

ஜெகனுத் தெய்வ வழிபாடு உடையது இந்து மதம். பைராவிகளும் சன்னியாசிகளும் நிறைந்திருப்பது இந்து மதம்.

*　　*　　*

இந்திய நாட்டின் பண்டைய மகோன்னத காலமென்று ஒன்று இருந்திருப்பதாக நம்பி, அதைப்பற்றி ஓயாது புகழ்ந்து கொண்டிருப்பவர்களின் கருத்தை நான் ஏற்றுக் கொள்வதில்லை.

இந்திய நாட்டின் துயரம் மிகப் பழமையானது. எனது கருத்தை சர். சார்லஸ்வுட் எழுதியுள்ள 'குலிகான்' என்னும் நூல் நன்கு வலியுறுத்துவதாகும். உங்கள் மனநிறைவுக்கு வேண்டுமானல் இந்திய வரலாற்றையே புரட்டிப் பாருங்கள். ஔரங்கசீப் காலத்திலாகட்டும், வடக்கே மொகலாய ஆட்சி நிலவியிருந்த காலத்திலாகட்டும், அல்லது தெற்கே போர்ச்சுக்கீசியர் ஆதிக்கம் வலிமை பெற்றிருந்த காலத்திலாகட்டும் மனநிறைவான நிலைமை இருந்ததுண்டா?

இன்னும் முகம்மதியர்கள் வட இந்தியாவைப் படையெடுத்த காலத்திலும் சரி, தென் இந்தியாவில் எழுவர் ஆட்சிமுறை நிலைத்திருந்த காலத்திலும் சரி, நிலைமையில் மாறுதல் இருந்ததில்லை. அதைவிட இன்னும் பழமையான காலத்தை எடுத்துக் கொள்வதாயினும், பிராமணர்களின் புராதன ஆதாரங்களின் மூல

மாகவே நாம் அறியக்கிடப்பது என்ன? இந்தியாவின் துர்ப்பாக்கிய துயர சகாப்தம் உலகம் படைக்கப்பட்டதாகக் கிறிஸ்தவர்கள் நம்பி வரும் காலத்திற்கு வெகு முன்னதாகவே துவங்கி விட்டதென்று தெற்றெனவிளங்கும். இதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆனால், முன்பு இந்திய நாடு பட்ட துன்ப துயரங்களெல்லாம் எத்தகையதாயினும், இந்திய நாட்டிற்கு அந்நியர்களால் இழைக்கப்பட்ட துன்பமானது அம்சத்தில் முற்றிலும் மாறுபட்டதும், இதுகாறும் அனுபவித்து வந்ததை விடக் கொடுமையானதுமான ஒருவகைத் துன்பமாகவே இருந்து வருகிறது.

* * *

ஆங்கிலேயரின் குடியேற்ற நாட்டு ஆட்சி முறை அவர்கட்குச் சுயமானதல்ல. டச்சுக்காரர்களின் கொடுங்கோன்மை முறையின் வெறும் போலி உருவமென்பதே பொருந்தும்.

ஆகவே, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிமுறையின் தன்மையை நேரடியாக விளக்குவதைவிட, முன் ஜாவாவில் ஆங்கிலக் கவர்னராயிருந்த சர். ஸ்டாபோர்டு ராபில்ஸ் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியைப் பற்றிக் கூறும் சில வாக்கியங்களை மட்டும் குறிப்பிடுவது போதுமானதாகும்.

அதாவது, "இலாபத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டெழுந்த டச்சுக் கம்பெனி

முன் மேற்கிந்தியத் தோட்ட முதலாளிகள் எப்படித் தங்கள் எஸ்டேட்டிலுள்ள ஏழை மக்களை விலைக்கு வாங்கிய காரணத்தால், தங்கள் விருப்பத்திற்கு அவர்களை ஆட்படுத்தியும், கொடுமைப்படுத்தியும் வேலை வாங்கினரோ, அதைவிட மோசமாகவும், மனிதப் பண்புக்குரிய சிறிதளவு மதிப்பும் கொடாது மிருகங்களிலும் கேவலமாக ஒவ்வொரு குடிமக்களையும் கருதி அவர்களிடமுள்ள உழைப்பின் சக்தியை விடாது கசக்கிப் பிழிவதற்கு தங்கள் தனித்த அரசியல் அனுபவத் தந்திரங்களாலும், வியாபாரிகளுக்குள்ள பேராசை, சுயநலம், சூழ்ச்சிப் பெருக்காலும்......ஆகிய முழு சக்தியையும் பயன்படுத்தி ஆண்டு வந்ததால் அநாகரிக ஆட்சிமுறைக்கு வேறு எடுத்துக்காட்டு எதுவுமில்லை என்றாகி விட்டது ''என்று கூறியிருப்பதே போதுமானது.

* * *

இந்தியாவில் ஒவ்வொரு காலங்களிலும் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட உள்நாட்டுப் போர்கள் எத்தனை ; படையெடுப்புகள் எத்தனை ; புரட்சிகள் எத்தனை ; பகைவன் கையில் பிடிபட்டுக் கிடந்து அல்லலுற்ற காலம் எத்தனை ; பஞ்சத்தால் வாடி வதைந்த காலம் எத்தனை ? இவ்வளவு அலங்கோலங்களுக்கும் அந்நாட்டில், எண்ணித் தொலையாத பல சிக்கல்களையுடையதும், அதிதுரிதமாக அழிக்கும் தன்மையுள்ளதுமான பல நூதன மாறுதல்களை எல்லாம்

உருவாக்கியிருக்கக்கூடுமென எவ்வளவு வெளிப் படையாகத் தோன்றுவதாயினும் — உண்மையில் அவைகள் அவ்வளவு வலுவும் ஆழமும் உள்ள நிரந்தரத் துன்பங்களாகக் கருதுவதற்கு இயலாது. தங்கள் பண்டைய வாழ்க்கை நிலை யினை இழந்தும், அதற்குப் பதிலாக யாதொன் றையும் பெறுது வாளாவிருத்தலே இந்திய சமு தாயத்தின் தற்போதைய துன்பத்திற்கும் ஓர்வித மனச்சோர்வுக்கும் காரணமாகும் என்பதோடு ஆங்கிலேய ஆட்சியால் இந்திய நாடு தனது எல்லாவித்மான சமுதாய வாழ்வின் பழக்க வழக்கங்களிலிருந்தும், வரலாற்றை யொட்டிய சார்புகளில்ருந்தும் அடியோடு விலக்கப்பட்டு அவதிக்காளாகி நிற்கிறது.

* * *

தட்பவெப்ப நிலையும் பிரதேசங்களின் இயற்கை அமைப்பும் குறிப்பாக சகாரா முதல் தொடர்ந்து அரேபியா, பெர்சியா, இந்தியா, தார்தாரி உட்பட ஆசியாக் கண்டத்தின் உயர்ந்த மேட்டுப் பிரதேசங்கள் வரையில் பரவி அமைந்து கிடக்கும் பாலைவெளிகளை முன்னிட்டும் பொது வாகக் கீழ் நாட்டிலுள்ள விவசாயம் அனைத்தும் செயற்கை வழியில் வெட்டி அமைக்கப்பட்ட பெரும் கால்வாய்களையும், நீர்த்தேக்கங்களையும் விவசாயத்திற்கு மூலாதாரமாகக் கொள்ள வேண்டி இருக்கிறது. இன்னும் பெர்சியா, மெசபட்டோமியா முதலிய பகுதிகளிலும்

இந்தியா போன்றே விளைநிலங்களுக்கு நீர் பாய்ச்சல் மூலமாகவே வளம் உண்டாக்க முடிகிறது. எகிப்திலும் இதே நிலைமைதான். இந்தக் கால்வாய்களின் வழியாகத் தாராள மாக நீர் பாய்வதற்கு ஆசியாவின் மேட்டுப் பிரதேசங்கள் தக்க வசதி அளித்து வந்திருக் கின்றன. இப்படி பொது தேவையாகவும், தேசப் பொருளாதார உயிர்நாடியாகவும் உள்ள நீர் பாய்ச்சல் முறையானது மேல் நாடுகளின் 'பிளாண்டர்ஸ்' வேலை இத்தாலி முதலிய பிரதேசங்களில் நடப்பதுபோல், தனிப்பட்டவர் களின் கூட்டுறவால் சாதித்துக் கொள்ளக்கூடிய காரியமாக இருக்கவில்லை. ஆசியாவின் நாகரிகம் ஒருவித தாழ்ந்த நிலையில் இருந்தது என்பதோடு கட்டுப்பாடு உண்டாக்கிக் கொள்வதற்கரிய பரந்த பிரதேசமானதாலும், மிகமிக இன்றியமை யாத நீர்ப்பாசன வேலைகளை ஒரு வலுவான மத்திய அரசே தக்கவாறு நிர்வகிக்க முடியுமே ஒழிய, வேறு எவராலும் முடியாதிருந்தது.

ஆகவே, ஆசியா கண்டத்திலிருந்த ஒவ் வொரு அரசும் நீர்ப்பாசனப் பொதுப்பணித் துறையைத் தங்கள் நிர்வாகத்தின் முக்கிய அம்ச மாகக் கொள்ள வேண்டியதாயிற்று. இப்படிச் செயற்கை முறையில் கால்வாய்கள் மூலம் நீர் பாய்ச்சி, நிலங்களைப் பண்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது ஒரு மத்திய அரசின் கடமையாக ஏற்பட்டு விட்டபோது,

அந்த அரசு வலுவோடு நிலேத்திருக்கிற வரை யில்தான், நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டு, செழித்தோங்குவதும், அந்த அரசு வீழ்ச்சி அடைந்த பொழுது நீர்ப்பாசனமும் கவனிக்கப் படாமல் செழிப்பான பிரதேசங்களெல்லாம் சீரழிந்து வெறும் திடலாக மாறுவதும் வழக்க மாகி விட்டது.

இதுவே முன் காலங்களிலெல்லாம் சீரும் சிறப்புடன் விளங்கி வந்த பல்மைரா, பேத்ரா, ஏமன் முதலிய பெரும் நகரங்களும், எகிப்து, பெர்சியா, இந்தியா ஆகியவற்றின் பெரும் பகுதி களும் இன்றும் புல்லற்றுப் பூண்டற்றுப் பாலே வனங்களுக்குச் சமமாகக் கிடப்பதற்குக் காரண மாகும். அதோடு, அக்காலங்களில் ஒரே ஒரு போர் நடப்பதாயினும், அதுவே, அப் பிரதேசங் களிலுள்ள மக்களே ஒழித்து பிறகு பல நூற் ருண்டுகளுக்கும் அவர்கள் நாகரிகம் இருந்த இடமே தெரியாமல் செய்துவிட முடியும் என்பதையும் இந்தப் பாலேவனங்களும் பாழ் பட்ட நகரங்களும் நமக்கு உணர்த்துவனவாய் இருக்கின்றன.

* * *

ஆங்கிலேயர் இந்தியாவில் பண்டைய வழக்கத்தை யொட்டியே வரி வசூலிக்கும் இலாகாவையும், இராணுவ இலாகாவையும் மாத்திரம் ஏற்படுத்திக் கொண்டு மிக முக்கிய யான நீர்ப்பாசனப் பணிகளே அடியோடு

அலட்சியம் செய்து விட்டார்கள். ஆகவே, மேல் நாடுகளைப்போல் குடிமக்களால் சுதந்தர மாக நடத்த முடியாத வேளாண்மையானது சீரழிய நேர்ந்தது.

இந்தியாவின் கடந்தகால அரசியல் நிலைமை எவ்வளவுதான் பல்வேறு மாறுதல்களுக்கெல் லாம் உள்ளாகியிருப்பதாகத் தோன்றினும், பத்தொன்பதாம் நூற்றுண்டு முதற்பகுதி வரை புராதனக் காலந்தொட்டு அதன் சமூக நிலைமை மட்டும் மாறுபடாமல் அப்படியே இருந்து வந்திருக்கிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

2

கைத்தறிகளும், கைராட்டினங்களும் அதனைக் கையாண்ட கோடிக்கணக்கான நூற் போர்கள், நெய்வோர்களுமே இந்திய சமூகத் தின் மூலநாடிகளாக இருந்து வந்திருக்கின்றனர். வரலாற்றுக்கு எட்டாத காலந்தொட்டு ஐரோப்பிய நாடுகள் இந்தியர் உழைப்பால் பிறந்த அற்புதமான மெல்லிய ஆடைகளைப் பெற்று அதற்குப் பதிலாகத் தங்களுடைய தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களைக் கொடுத்து வந்திருக்கின்றன. அதனால் இந்திய

சமுதாயத்திற்கு இன்றியமையாத அங்கமாய் நிற்கும் பொற்கொல்லர்களுக்கு ஓயாத வேலைக்கு இடமிருந்தது.

இந்திய மக்களில் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களும் நகைகளில் மிகுந்த பற்று உடையவர்கள். குறைந்த ஆடை உடுத்தியிருப்பினும், அவர்கள் காதிலும், கழுத்திலும், கைவிரல்களிலும் தங்க நகைகளை அணிந்திருப்பது சர்வ சாதாரணம். பெண்களும், குழந்தைகளும் தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்த கைக்காப்புகளையும், கால்காப்புகளையும் அணிவதோடு ஒவ்வொரு வீட்டிலும் தங்கம், வெள்ளிகளால் செய்த தெய்வ விக்கிரகங்களும் இருப்பதைக் காணலாம்.

இந்திய நூற்றல், நெசவுத் தொழில்களை அயலார்களே அடியோடு அழித்தவர்களாவர். இந்தியாவிற்கு ஐரோப்பிய மார்க்கெட்டிலுள்ள பஞ்சு வியாபாரத்தை இங்கிலாந்து முதல் முதல் அழிக்கத் தொடங்கியது. அது பிறகு இந்தியாவிற்குள் மில் நூல்களைப் புகுத்த, பஞ்சுக்குத் தாயகமாயிருந்த நாட்டில் பஞ்சே இல்லாமல் ஒழிந்தது.

1819ஆம் ஆண்டு முதல் 1836ஆம் ஆண்டு வரையில் பிரிட்டனுடைய நூல் வியாபாரம் 1க்கு 520 வீதம் பெருகியது. 1824ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் மஸ்லின் துணிகள் 10 இலட்சம் கெஜத்திற்கும்

குறைவாய் இருந்தது. ஆனால், அது 1837ஆம் ஆண்டிற்குள் அது 640 இலட்சம் கெஜமாக உயர்ந்தது. அதே சமயம் டாக்கா நகரத்தின் மக்கள் தொகை இலட்சத்து ஐம்பதினாயிரத்தி லிருந்து இருபதினாயிரத்துக்குக் குறைந்தது. இப்படி இந்திய நெசவிற்குப் பெயர்பெற்ற நகரங் களெல்லாம் மக்கள் தொகை குறைவுற்றது.

* * *

இந்திய மக்கள் மற்ற கீழ் நாட்டு மக்களைப் போலவே ஒருபுறம் விவசாயத்திற்கு இன்றியமை யாத நீர்ப்பாசன வசதிகளை மத்திய அரசின் பொருப்பிற்கு விட்டுவிட்டு, மற்றொரு புறம் நாடு முழுதும் சிதறுண்டு சிறு விவசாய வகுப்பு களாகவும், கைத்தொழில் வகுப்புகளாகவும் பிரிந்து தங்களுக்குள் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்த காரணத்தாலேயே கிராம அமைப்பு என்று அழைக்கப்படுகின்ற ஓர்வித சமூக அமைப்பு ஏற்பட்டதற்குக் காரண மாகும். இதனால் ஒவ்வொரு சிறு யூனியன் களுக்கும் சுதந்தரமான கட்டுப்பாடும், தனித்த வாழ்க்கையும் ஏற்பட்டது. இந்தக் கிராம அமைப்பின் விசித்திரமான தன்மையைப் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் இந்தியா பற்றிய அரசின் அறிக்கைகளில் விவரித்திருப்பதைக் கொண்டு ஒருவாறு நிதானிக்கலாம்.

[இவ்விடத்தில் – ஒரு கிராமம் என்பது ஏறத்தாழ 100 முதல் 1000 ஏக்கர்கள் கொண்ட

நிலப்பரப்பு என்னும் அரசியலில் தற்கால மாநகரம் அல்லது நகரத்திற்கு ஒப்பாகுமென்றும், அதில் அரசின் அலுவலர்கள், நாட்டாண்மைக்காரர், கொத்தவால், கர்ணம், தலையாரி, தோட்டி, எல்லை காப்பவர், புரோகிதர், நீராளர், கிராம ஆசிரியர், முடி வெட்டுபவர், வண்ணார், பூசாரி, பொற்கொல்லர், கொல்லர், சக்கிலியர் போன்றவர்களையும் அவர்களது கடமைகளையும் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த எளிய நகராட்சி நிர்வாகத்தின் கீழ் மக்கள் வழிவழியாய் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்றும், நகரம் போரால் அழிவுற்றாலும், நோய்களால் பீடிக்கப்பட்டாலும், கிராம எல்லைக்ளுக்கோ, கிராமத்தின் பெயருக்கோ எவ்வித மாற்றமுமின்றி ஒரே உரிமை, ஒரே நோக்கம் ஆகியவைகளோடு ஒரே பரம்பரையில் வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எப்படிப் பல காலம் வாழ்ந்து வந்தார்கள் என்றும், அரசர் மாறினும், ஆட்சி மாறினும், அவர்களுடைய பொருளாதார நிலைமை எவ்விதத்திலும் மாறுவதில்லை என்றும் விவரிக்கப் பட்டிருக்கிறது.]

இப்படி வார்ப்படம் போன்ற உருவத்திலுள்ள சிறு சமூக அங்கம் நாளடைவில் பெரும் பகுதி குலைந்துவிட்டது. இன்னும் அழிந்து மறைந்து வருகிறது. ஆங்கில நீராவி இயந்திரத்திலும் ஆங்கில தாராள வியாபாரத்தினாலுமே அழிவு ஏற்பட்டதென்று கூறலாம்.

குடிசைத் தொழிலேயே பொருந்து நின்ற இந்தக் குடும்பக் கூட்டங்கள் நூதனமான ஒற்றுமையுடன் கூடிய கைநூற்றல், கைநெசவு, கையால் உழுது பயிரிடும் விவசாயம் முதலியவை களால் தனக்குத்தானே நிரந்தரமான ஜீவிதத் தைத் தேடும் சக்தியைப் பெற்றிருந்தனர்.

ஆங்கிலேயர்கள் வரவால் லங்காஷயரில் நூற்போர்களேயும், வங்காளத்தில் நெய்வோர் களேயும் பிரித்துவிட்டதெனலாம். அல்லது சிறிது அநாகரிகமும் சிறிது நாகரிகமும் உள்ள கூட்டங்களாகிய இந்திய நூற்போர்களேயும் நெசவுக்காரர்களேயும் அவர்களது பொருளா தார அடிப்படையையும் கெல்லி அடியோடு அழித்துவிட்டதெனலாம். அதனுல் உண்மை யைக் கூறுமிடத்து ஆசியாவிலே இதுவரையில் கண்டும் கேட்டுமிராத ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது எனலாம்.

இப்பொழுது நாம் இதுகாறும் கூறி வந்தவைகளேக் கொண்டு அதாவது எண்ணித் தொலேயாத வழிவழி வந்த தொழிற் குடும்பங் களான, தீமையே செய்ய இயலாத, சமூகக் கூட்ட நிறுவனங்கள் ஒற்றுமையை இழந்து துன்பக் கடலில் ஆழ்ந்தி, அதனுல் அச்சமூகத் தைச் சேர்ந்த ஒவ்வொரு தனி நபர்களும் தங்கள் பழமையான நாகரிகத்தையும் வழிவழி வந்த ஜீவிய சாதனத்தையும் இழந்து, துயருறு வதைப் பார்க்கும் பொழுது உண்மையில் நமது

மனத்தில் பெரிதும் துக்கமும் அனுதாபமும் ஏற்படுவது இயல்பு.

ஆனால், அதே சமயம் நாம் ஒன்றை மறந்து விடக் கூடாது. அதாவது, இந்த முழுமையான கிராமச் சமூகம் எவ்வளவோ தீமையற்றதாக எனக்குத் தோன்றினும், இவைகளே எப்பொழுதும் கீழ்நாட்டுக் கொடுங்கோன்மைக்கெல்லாம் வலிமையான அடிப்படையாக இருந்து வந்திருக்கிறது. இவைகள் மனிதனுடைய மனதை மிகமிகக் குறுகிய எல்லைக்குள் ஒடுக்கி மூட நம்பிக்கைக்கு வலுவான கருவியாகவும், வழிவழி வந்த பழைய மரபுகளுக்கு அடிமையாகவும், செய்து, வரலாற்று அனுபவத்தால் ஏற்படக் கூடிய எவ்வித சோபிதத்தையும் சக்தியையும் அனுபவிக்காதவாறு செய்துவிட்டது.

*　　　*　　　*

காட்டுமிராண்டியின் அகம்பாவ சீலமும், தற்புகழ்ச்சியும் அவனை எப்பொழுதும் கிணற்றுத் தவளை போல் ஒரே இடத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, அதுவே தனது உலகமாகக் கருதவும் மற்றவைகளை அலட்சியம் செய்யவும் தூண்டுகிறது. இந்த அசிரத்தையால் எவ்வளவோ பேரரசுகள் அழிந்தாலும் சரி, எவ்வளவு துன்பமும் துயரமும் ஏற்பட்டாலும் சரி, பெரிய நகரங்கள் அழிந்து வெறும் திடலானாலும் சரி, சர்வ சாதாரணமாகக் கருதி, வாளா ஒடுங்கிக் கிடப்பதும், நேர்ந்த பொழுது

தானும் அத்துன்பத்திற்காளாகி அழிந்து மடிவதும் இயல்பாய் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்னும் இந்தப் பெருந்தன்மையற்ற தேக்கங் கொண்ட தாவர வாழ்க்கையும், சுயநலமான இருப்பையும், மாறுபட்ட கொடுமையான இலட்சியமில்லாத உறுதியற்ற வாழ்க்கையும் அளவுகடந்த அழிவு சக்தியை உருவாக்குவதோடு – அதனாலேயே இந்தியாவில் கொலைகூட மத சம்பிரதாயங்களாக ஆகிவிட்டதென்பதை நாம் மறக்கக் கூடாது.

மற்றும் இந்தச் சிறு கூட்டங்கள் சாதிமத வேறுபாடுகளாலும், அடிமை கொள்ளும் வழக்கத்தாலும் பீடிக்கப்பட்டு மனிதனைச் சந்தர்ப்பத்திற்கு உயர்த்தாது, பிற வேற்றுமைகளர்ல் வேற்றுமைப்படுத்தி தாழ்வடையச் செய்கிறது. அவைகள் தனக்குத்தானே வளர்ச்சியற்ற ஒரு சமூக நிலைமையை என்றென்றும் மாறாத இயற்கை நியதியாகச் செய்துவிட்டன.

அதனால் இயற்கைக்குக் கீழ்ப்படியும் – இயற்கையைப் பயந்து வணங்கும் இழிதகைமையினையும் உண்டாக்கி, மனிதன் இயற்கையை ஆள்பவன் என்பதை மறந்து, இயற்கைக்கு அடிமை என்று மண்டியிட்டுக் குரங்கையும், பசுவையும் வணங்கும்படி செய்தது என்பதை நாம் ஒருக்காலும் மறந்துவிடக் கூடாது.